
# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 1 டிசம்பர் 2024

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# பிள்ளையார் நோன்பு சிறப்பிதழ்

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

1 இலட்சம் சீட்டு
முதல்
1 கோடி சீட்டு
வரை....




ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

78th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில்
மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356

நகரத்தார் வாசிப்பில் ஓர் அங்கமாக அனைவரது
மேலான ஆதரவுடன்

# 4 வது


ஆண்டில் அடியெடுத்து
வைக்கிறோம்.
தொடர்ந்து ஆதரவு அளித்துவரும் வாசகர்கள்
அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை
தெரிவித்து கொள்கிறோம்.

நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

www.naamnagarathar.com

97917 76534




GET IT ON
Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

டிசம்பர் 2024

மலர் : 4 இதழ் : 1

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...




## நான்காமாண்டில் நாம் நகரத்தார் மின்னிதழ்.

வாசகர்களுக்கு அன்பு வணக்கம்...!

வெற்றிகரமாக இம்மாதம் தனது இதழியல் பயணத்தில் மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது உங்கள் நாம் நகரத்தார் மின்னிதழ்.

ஒரு சிறு தாவரம் போல் தோன்றியது இன்று தனக்கென்று ஓர் இடத்தை அந்தச் சிறு தாவரம் உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

அனைவரது அபரிமிதமான அன்பும், ஒத்துழைப்பும் காரணமாக எதிர்பார்த்ததை விட மிக அதிகமான அளவில் உலகளவிலான நகரத்தார் பெருமக்களிடம் நாம் நகரத்தார் மின்னிதழ் சென்று சேர்ந்தது. வாசகர்கள் அனைவரிடமும் இந்த புதிய முயற்சிக்கு பெரிய வரவேற்பு இருந்தது.

இன்று வரை உங்கள் அனைவரது ஒத்துழைப்பால் உலகளவில் நகரத்தார் பெருமக்களை வாட்ஸப், முகநூல், டிவிட்டர் போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக வெற்றிகரமாக சென்றடைந்து கொண்டிருக்கிறது. உண்மையில், இது நாம் நகரத்தாரின் மின்னிதழின் வெற்றியல்ல, இது முழுக்க முழுக்க வாசகர்களாகிய உங்களது ஈடுபாட்டால், பங்களிப்பால், பகிர்வுகளால் தொடர்ந்து நீங்கள் அளித்து வரும் ஆதரவால் மட்டுமே சாத்தியமான ஒரு வெற்றி.

இந்த உறவுக்காக உளமார உங்களுக்கு இருகரம் கூப்பி நன்றி தெரிவிப்பதோடு, உங்கள் நம்பிக்கையைத் தொடர்ந்து தக்கவைக்கும் வகையில் செம்மையான பாதையில் பயணிக்கும் என்று உறுதியை எங்கள் சார்பில் உங்களிடம் கூறுகிறோம்.

நமது மின்னிதழில் கவிதை, பண்பாடு, ஆன்மிகம், சமையல், பங்குசந்தை, வணிகம், உணவு, ஜோதிடம், இலக்கியம், வாழ்வியல் என பல்வேறு தலைப்புகளின் கீழ் படைப்புகள் சுருக்கமாக எளிதில் படிக்கும் வகையில் இருப்பது தனி சிறப்பு.

நாம் நகரத்தார் மின்னிதழில் வெளிவரும் செய்திகள், கதைகள், வரலாற்றுத் தகவல்களை பலரும் மற்றவர்களுக்கு வாட்சப்பிலும் ஏனைய சமூக வலைத் தளங்களிலும் பகிர்வது மட்டுமின்றி, வளரும் இன்றைய தலைமுறையினரிடம் செய்திகள் குறித்து விவாதிப்பது, வரலாற்று நிகழ்வுகளையும் எடுத்துக் கூறுவது போன்ற செயல்கள் நம்மின்னிதழை மேலும் செம்மையாக்குவதோடு எங்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருகின்றன.

4ஆம் ஆண்டை தொடங்கும் நம் இதழின் இம்மாத பதிப்பு பல புதிய பகுதிகளுடன் மலர்கிறது.

நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த மூன்று வருட காலத்தில் அனைவரது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ்போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

தற்போது இந்த இதழ் அனைவரும் தங்கள் கைபேசி வாயிலாகவும், இணைய வலைத்தளத்திலும் பதிவிறக்கம் செய்து எளிதில் படிக்கும் வகையில் மின்னிதழாக வடிவமைக்க பட்டுள்ளது. மேலும் நமது மின்னிதழ் வாசகர்கள் வசதிக்காக தங்கள் விருப்ப நேரத்தில் படிக்கும் வகையில் மின்னிதழின் MOBILE APP தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது .

மூன்றாம் ஆண்டில் தடம் பதிக்கும் இந்த வேளையில் இதழின் தொடக்கம் முதல் எங்கள் முயற்சிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வளர்ச்சிக்கு உதவிகள் செய்து வரும் திரு .உமாபதி அருணாசலம் – இயக்குநர் .ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் பி லிட் பள்ளத்தூர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் புத்தக ஆக்க பணியில் தொடர்ந்து தங்கள் பங்களிப்பை செவ்வனே செய்து வரும் எழுத்தாள நண்பர்களுக்கும், விளம்பரங்கள் அளித்து எங்களது வளர்ச்சியில் உறுதுணையாய் இருக்கும் வணிக நிறுவனங்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளங்களில் மின்னிதழை பகிர்ந்து உதவும் நகரத்தார் சமூக இணைய வலைத்தள குழுக்களின் நிர்வாகிகளுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

பிள்ளையார் நோன்பு நகரத்தார் மக்களுக்கு மிக முக்கிய நிகழ்வு. இந்த வருட பிள்ளையார் நோன்பு வரும் ஜனவரி மாதம் 04.01.2025 அன்று வரவிருக்கிறது. அதனையொட்டி நான்காம் ஆண்டை தொடங்கும் நம் இதழின் இம்மாத பதிப்பு பிள்ளையார் நோன்பு சிறப்பிதழாக மலர்கிறது.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். "இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு" என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

நமது நாம் நகரத்தார் மின்னிதழ், அனைத்து நகரத்தாரிடமும் சென்றடைய வேண்டும். அதனால், சமூகத்தில் நல்ல பல மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பதே நம் எங்களின் எண்ணம்

இந்த இதழ் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் தனது பணியினை தொடரும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்





# வாழ்த்துச் செய்தி

**நூறாண்டு"நாம்நகரத்தார்"மின்னிதழ்**

**வேர்ஊன்றித் திகழ்ந்திடுக!**

நகரத்தார் பெருமைதனை மாதந்தோறும் மின்னிதழாய்
தகவல்களின் தொகுப்பாக தரமிகுந்த தனிஇதழாய்
நாம்நகரத்தார் திங்களிதழ் நலமுடனே தொடர்கிறது!
நாளும்அது வளர்கிறது நான்காம்ஆண்டு மலர்கிறது

விதவிதமாய் இதழ்கள்பல விழிபிதுங்க மலர்ந்தாலும்
நிதம்அவைகள் வாசகரின் நெஞ்சத்தில் நின்றதில்லை!
தகவுடைய சொக்கலிங்கம் தான்பிறந்த சமூகத்தின்
புகழ்தன்னை பதித்திடவே மின்னிதழைப் பதிப்பித்தார்!

ஒருநாளும் மின்னிதழால் கோடிகள் குவிந்திடாது!
வரும்படியை எதிர்பார்த்து வாழ்பவரா சொக்கலிங்கம்!
அருமைமிகு நகரத்தார்கள் ஆற்றியநல் தொண்டுதனை
பெருமையுடன் வெளியிட்டு பேர்உவகை கொள்கின்றார்!

இளைஞர்கள் பலரும் இன்று ஆர்வமுடன் நாம்நகரத்தார்
விலையில்லா மின்னிதழை விரும்பியே படிக்கின்றார்!
கலைநயமும் கருத்தழகும் காவியமாய் இணைந்தே
வலைத்தளத்தின் வழியாக வருவதே சிறப்புத்தானே!

நகரத்தார்கள் இவ்விதழை நாளெல்லாம் வரவேற்று
சிகரத்தில் வைத்திடுவீர்! சிறப்புதனை போற்றிடுவீர்!
நூறாண்டு நாம்நகரத்தார் நம்மினத்துப் புகழ்தன்னை
வேர்ஊன்றி தினம்பரப்பும்! சேர்ந்துநாம் ஆதரிப்போம்!

வேள்வியென இப்பணியை விருப்பமுடன் செய்திடவே
தோள்கொடுத்து தாங்குகிற நல்ஆசிரியர் உமையாளின்
பேராற்றல் துணையாலே பதிப்பாளர் சொக்கலிங்கம்
ஊர்போற்ற உயர்ந்திடுவார்! உண்மையிது ஏற்றிடுவீர்!

தனித்தரமாய் மின்னிதழை தமிழினிலே வெளியிடும்
கனிவுமிகு சொக்கலிங்கம்கருத்தறிந்து பணிபுரியும்
அறிவாற்றல் மிக்கதொரு ஆசிரியர்குழு துணையோடு
செறிவுடனே நாம்நகரத்தார் சிறக்கிறது வாழ்த்துகிறேன்!

கண்ணனூர் முருகனவன் கனிவுடனே அருளிடுவான்!
எண்ணப்படி மின்னிதழும் எழிலுடனே தினம்வளரும்!
வண்ணத்தில் அழகுஊட்டி வாசகர்கள் வியந்திடவே
மின்னிதழை தருகின்றீர்! மாப்புகழைப் பெற்றிடுவீர்!

வாழ்த்தி மகிழ்வது:
– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.






PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
PETROL RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR JOURNEY NOW
Go far and wide with just a single charge
LECTRIX
Book Your TEST DR!VE Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- பிள்ளைகளின் முன்னேற்றத்தில் பெற்றோரின் பங்களிப்பு சரியா? தவறா? –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .................................. 13

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் .................... 30

**கவிச்சோலை**

- சைக்கிள் – கவிஞர் எம்.சோலை காரைக்குடி .......................... 36
- ஜோடிக் கிளிகள் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் ................. 87

**சிறப்புப்பக்கம்**

- பிள்ளையார் சுழியின் தத்துவம்... .................................... 39
- பிள்ளையார் பெருங்கதை – விரதம் – ஆ.தெக்கூர் கண.இராம.நா. இராமநாதன். 43

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA .......... 49

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............ 50

**பக்தித் தொடர்**

- சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள் –ச.முத்துலெட்சுமி, திருநெல்வேலி ......... 53

**படித்ததில் பிடித்தது**

- சார்லி சாப்ளின் ................................................ 66

**பங்குசந்தை**

- ஐ பி ஓ செய்திகள் –கார்த்திக் முத்தப்பன் நகரத்தார் கேப்பிட்டல் ............ 69

**உணவே மருந்து**

- நெல்லிக்கனி அள்ளித் தரும் ஆரோக்கியங்கள்! ........................ 77

**சமையல்**

- பிள்ளையார் நோன்பு பலகாரங்கள்.................................. 89

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்... கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) .. 95

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி... விருச்சிக லக்கனம்..! ஜோதிடர் எல்லி....................... 107

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# பிள்ளைகளின் முன்னேற்றத்தில்

## பெற்றோரின் பங்களிப்பு சரியா? தவறா?



– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

என்னுடன் வங்கியில் பணியாற்றிய நண்பன் ஒருவனுக்குத் திருமணம் ஆனது.பெண் குழந்தைகள் இருவர் பிறந்தனர்.

அவன் ஒரு எளிமையான குடும்பத்தில் பிறந்தவன். அவனுடைய பெற்றோர்கள் அவனைக்கிராமத்திலுள்ள அரசுப்பள்ளியில் படிக்க வைத்தனர். அவனும் நன்கு படித்தான். கல்லூரியில் படிக்க வைக்க அவனது பெற்றோர்க்கு ஆசை இருந்தாலும்,கையில் கல்லூரிக்குப் பணம் கட்டும் அளவுக்குப்பண வசதியில்லை.



S.S.L.C.வரை படித்தவன் குடும்பத்தின் சூழ்நிலையால் கல்லூரிக்கு சென்று படிக்க இயலவில்லை. அவனுக்கு அது மிகப் பெரிய வருத்தமாகத்தான் இருந்தது.

அந்தக்காலத்தில் S.S.L.C என்பதே வேலைக்குச்சேர தகுதியுள்ள படிப்புத்தான். அவனது உறவினர் யாரோ வழிகாட்ட,வங்கித்தேர்வு எழுதி, அதன்பின் ஒருவர் வேலைக்கு சிபாரிசு செய்த காரணத்தால், வங்கியில் வேலைக்குச் சேர்ந்துள்ளான்.

எங்களோடு உரையாடும் போது அடிக்கடி சொல்வான், நான் கல்லூரியில் படிக்க ஆவலாய் இருந்தேன். என் பெற்றோரால் அதனை நிறைவேற்றி வைக்க முடியவில்லை. என் மகள்கள் இருவரையும் நல்லதொரு பள்ளியில் சேர்த்து, ஆங்கில மொழி வழியாக நன்குபடிக்க வைத்து உயர் பதவியில் அமர்த்த வேண்டும் என்று சொல்வான்.

அதற்கு அதிகம் செலவாகுமே! என்று நான் அவனைக்கேட்டபோது சொன்னான். ஆமாம் செலவுதான் ஆகும். எனக்குக் கிடைக்காமல் போன ஆங்கிலக்கல்வி, கல்லூரிக்கல்வி, என் பிள்ளைகளுக்கு கிடைக்காமல் போய்விடக் கூடாது. நான்பட்ட துன்பத்தை என் மகள்கள் படக்கூடாது. எவ்வளவு செலவு ஆனாலும், கடன் வாங்கியாவது படிக்க வைப்பேன் என்று சபதமே செய்தான்.

அதையே தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக மாற்றிக் கொண்டான். அவனது மூத்த மகளை பள்ளியில் சேர்க்க வேண்டிய காலம் வந்தது.



சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள ஒரு புகழ்பெற்ற பள்ளியில் சேர்த்துவிட. எண்ணினான். அந்தப் பள்ளியில் இடம் கிடைப்பதற்காக, சிபாரிசு கேட்டுப்பலரையும் சென்று பார்த்தான். அவன் நினைத்தது போல தன் மகளுக்கு அந்தப் பள்ளியில் இடம் கிடைத்து விட்டது. அன்றைய நிலையில் அந்தப் பள்ளியின் கல்விக் கட்டணம் அதிகமாகத்தான் இருந்தது. அதற்காக அவன் கடன் வாங்கத் தொடங்கினான். பள்ளிக்கு கட்டவேண்டியதொகையை முழுவதுமாக கட்டிவிட்டு, அன்று அலுவலகம் வந்தவன் மகிழ்ச்சியோடு காணப்பட்டான்.

என்னப்பா மகளுக்கு பள்ளியில் இடம் கிடைத்ததா? என்றேன். மகளைப் பள்ளியில் சேர்த்துவிட்டேன். பணமும் கட்டிவிட்டேன் என்றான். இனி +2வரை அவள் படிப்பதற்கு எந்தத் தடையுமில்லை. நல்ல பள்ளியில் அவளுக்கு இடம் கிடைத்தது மிக்கமகிழ்ச்சி என்றான். இனி அவள் என்ன படிக்க விரும்புகிறாளோ அதைப் படிக்க வைப்பது தான் எனக்கு முக்கியம் என்றான்.

பள்ளிக்கூடம் திறந்ததும், அவனது மகளைப் பள்ளியில் விட்டு, பின் கூட்டிவர வேண்டிய வேலையும் அவனுக்கு வந்து சேர்ந்தது. அவனது வீட்டில் இருந்து பள்ளிக்குச் செல்வதற்கு அரைமணி நேரம் ஆகும். நண்பனிடம் இருசக்கர வாகனம் இல்லை. ஆட்டோவில் தினமும் போய்வர அதிகம் செலவாகும். அவன் சற்றும் தயங்காமல், வங்கிக் கடனில் இருசக்கர வாகனம் ஒன்றை வாங்கினான். அதிலே கொண்டுபோய் பள்ளியில் விட்டுவிட்டு,பின் கூட்டி வந்தான். இதன் காரணமாக அவனுக்கு மற்ற செலவுகள் கூடின. அதை எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், கடன் வாங்கிச்செலவு செய்தான்.

இரண்டு ஆண்டுகள் கழித்து, அவனது இளைய மகளையும் பள்ளியில் சேர்க்க வேண்டிய காலம் வந்தது. மறுபடியும் தனது மூத்தமகள் படிக்கும் பள்ளியிலேயே சேர்த்துவிட எண்ணினான்.



இதுகுறித்து எங்களிடம் பேசினான். அப்போது ஒரு மகளின் கல்விக் கட்டணத்தை கட்டுவதே உனக்குச்சவாலாக உள்ளது. அத்துடன் மற்ற செலவுகளை மேற்கொள்வதும் சிரமமாக உள்ளபோது, ஏன் நீ உன் இளையமகளையும் அதே பள்ளியில் சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறாய்? வேறு எதாவது பள்ளியில் சேர்த்து விடு! என்று நாங்கள் சொன்னோம்.

அதற்கு அவன் சொன்ன பதில், என் மகள்கள் இருவரும் எனக்கு இருகண்கள் மாதிரி. ஒருத்தியை புகழ் பெற்ற பள்ளியிலும், இன்னொருத்தியை அரசுப்பள்ளியிலும் சேர்த்து விட நான் விரும்ப வில்லை என்றான்.

எனக்குக் கிடைக்காதவைகள் எல்லாம் என் பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டும். நான் பட்ட துன்பத்தை என் பிள்ளைகள் படவே கூடாது. என்னால் எவ்வளவு கடன் வாங்க முடியுமோ அவ்வளவு வாங்கி, என் மகள்கள் இருவரையும் அங்கு தான் படிக்க வைப்பேன் என்றான்.

உனக்கு உன் பெற்றோர் செய்தது குற்றமில்லை! அதை நீ ஏனோ உன் மனதில் இருந்து அகற்ற மறுக்கிறாய்?எங்கள் பெற்றோர்களும் எங்களை அவர்களால் முடிந்தளவு தான் படிக்க வைத்தார்கள். அன்றையக்காலக் கட்டத்தில்,உன் பெற்றோர் கூலிவேலை பார்த்து, அதில் கிடைத்த பணத்தில் தானே உன்னை படிக்க வைத்தார்கள். உனது பெற்றோர் படிக்காதவர்கள்.

அந்த நிலையிலும் உன்னைப் படிக்க வைத்துள்ளார்கள். அதை நீ பெருமையாகக்கருத வேண்டும்.நீ கல்லூரியில் சேர்ந்து படிக்க நினைத்த போது, தங்களின் உண்மையான நிலையை உன்னிடம் சொல்லி புரியவைத்து, படித்த படிப்பை வைத்து வேலைக்குப்போ! என்று சொன்னதில் தவறு ஒன்றுமில்லை என்றோம்.



தன் பிள்ளைகள் நன்றாக வாழ வேண்டும் என்று தான் ஒவ்வொரு பெற்றோரும் நினைப்பார்கள். அதே நேரத்தில் தங்களுடைய நிலை என்னவென்று தெரியாமல் ஆசைப்படும் பிள்ளைகளிடம்,தங்களின் நிலையை எடுத்துச் சொல்லும் பெற்றோரே சிறந்தவர்கள்.

உன்னுடைய பெற்றோரை நீ உள்ளபடியே போற்ற வேண்டும். இன்று கூட அவர்கள் உன்னிடமிருந்து பணத்தையோ, பாசத்தையோ எதிர்பார்க்காமல், உழைத்துத் தானே வாழ்கிறார்கள்.

உன்னுடைய நிதி நிலையை உன் மகள்களுக்குச் சொல்லி புரிய வைக்க வேண்டும். நமது நிலையை நம் பிள்ளைகளிடம் சொல்வதால் நமது மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது. நம்மைப்பற்றிய ஒரு தெளிவு அவர்களுக்கு கிடைத்துவிட்டால், தங்களைத்தாங்களே நிலை நிறுத்திக்கொள்ள முயல்வார்கள்.

நாங்கள் எவ்வளவோ சொன்னோம். ஆனால் அவையெல்லாம் அவன் காதிலும் ஏறவில்லை, மனதிலும் தங்கவில்லை. பின்னாளில் அந்த மகள்களின் கல்விச் செலவிற்காக, பெரும் தொகையை கடன் வாங்கி, அடைக்க முடியாமல் தவித்தான். பின் அவனது மனைவியும் தனியார் நிறுவனத்திற்கு வேலைக்குப் போனார்கள்.

தன்னம்பிக்கையை பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்க வேண்டும். பிள்ளைகள் தோல்வியுற்று தயங்கி நிற்கின்ற பொழுது தட்டிக் கொடுத்து ஊக்கம் தந்திட வேண்டும். பிள்ளைகளின் மீது பாசத்தைக்காட்டுவதில் தவறில்லை. பரிவு காட்டுகிறேன் என்ற பெயரில் நம்மால் முடியாதவற்றை, நமக்குக் கிடைக்காதவற்றை யெல்லாம் செய்து கொடுத்து விட வேண்டும் என்று நினைத்து விடாதீர்கள்.

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI
Since 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு **30%** முதல் **40%**வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

**TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.**

**VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,**

**SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,**

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6-வது கிராஸ் - கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) ,அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

50,தெற்கு மாரட்வீதி (ஸ்டேட் பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ வாய்மையே வெல்லும் ★

மேலை நாடுகளில் தத்தி தத்தி நடக்கும் குழந்தைகளை, பெற்றோர்களே நீச்சல் குளத்திலே தூக்கிப்போட்டு விடுவார்கள். அந்தக் குழந்தைக்கு நீச்சல் தெரியாது,இருந்தாலும் தண்ணீருக்குள் விழுந்த குழந்தை, எப்படியாவது நீச்சலைக்கற்றுக் கொள்ளும் என்னும் மனஉறுதி பெற்றோரிடம் காணப்படுகிறது. அந்த நம்பிக்கையைத்தான் நாம் ஊட்ட வேண்டுமே தவிர நாமும் குழந்தையோடு தண்ணீரில் இறங்கினால் குழந்தை ஒருநாளும் நீச்சல் கற்றுக்கொள்ளாது. நம்மையே அது சுற்றிச் சுற்றி வரும்.

உங்களுக்கு ஒன்று தெரியுமா நண்பர்களே!

பறவைகளில் கழுகுகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. அவை மிக உயரமாகப் பறக்கக் கூடியவை. கழுகுதான் வலிமை மற்றும் தைரியம் ஆகியவற்றின் சின்னமாகக் கருதுப் படுகிறது. ஆனால் அந்தக் கழுகுகளின் பறக்கும் சக்தியும், வலிமையும், தைரியமும் பிறப்பிலேயே வருபவை அல்ல. அவை கழுகுகளால் ஒரு கட்டத்தில் கற்றுக் கொள்ளப்படுபவை தான் என்பதை எத்தனை பேர் அறிவார்கள்.

குஞ்சுகளாகக் கூட்டில் சுகமாக, பாதுகாப்பாக இருக்கும் போது கழுகுகள் பலவீனமாகவே இருக்கின்றன. அவை அப்படியே சுகமாகவும், பாதுகாப்பாகவுமே இருந்து விட்டால் வலிமையாகவும், சுதந்திரமாகவும் மாறுவது சாத்தியமல்ல.

எனவே குஞ்சுகளாக அவைகள் இருக்கும் போது வேண்டிய உணவளித்து, பாதுகாப்பாக வைத்திருக்கும் தாய்க்கழுகு, குஞ்சுகள் பறக்க வேண்டிய காலம் வரும் போது தன் குணத்தை சற்று மாற்றிக்கொள்கிறது.



முதலில் கூடுகளில் மெத்தென இருக்கும் படுக்கையினைக் கலைத்து சிறு குச்சிகளின் கூர்மையான பகுதிகள் வெளிப்படும்படி செய்து கூட்டை சொகுசாகத்தங்க வசதியற்றபடி செய்து விடுகின்றது. பின் தன் சிறகுகளால் குஞ்சினை அடித்து இருக்கும் இடத்தை விட்டுச்செல்லத் தூண்டுகின்றது.

தாய்ப் பறவையின் இம்சை தாங்க முடியாத கழுகுக் குஞ்சுகள் கூட்டின் விளிம்புவரை வந்து நிற்கின்றது. அது வரை பறந்தறியாத குஞ்சு கூட்டின் வெளியே உள்ள உலகத்தின் ஆழத்தையும் உயரத்தையும், பரந்த அளவையும் பார்த்து மலைத்து நிற்கின்றது.

அந்தப் பிரம்மாண்டமான உலகத்தில்,கழுகுக் குஞ்சுகள் தனித்துப் பயணிக்க தைரியமற்று பலவீனமாக நிற்கின்றது. அந்தத் தருணம் தான் ஒவ்வொரு குஞ்சும் தன் வாழ்க்கையில் சந்தித்தாக வேண்டிய ஒரு முக்கியமான தவிர்க்க முடியாத கட்டமாகத் திகழ்கிறது. அந்த நேரத்தில் அந்தக் குஞ்சையே தீர்மானிக்க விட்டால் அது கூட்டிலேயே பாதுகாப்பாகத் தங்கி விட முடிவெடுக்கலாம் என்பதை தாய்க்கழுகு நன்குஅறியும்.

தன் குஞ்சுகளுக்கு கூடு என்பது என்றென்றைக்கும் பாதுகாப்பாகத் தங்கி விடக் கூடிய இடமல்ல! என்பதைச்சுட்டிகாட்ட நினைக்கும் தாய்க்கழுகு.

சுயமாகப் பறப்பதும் இயங்குவதுமே ஒரு கழுகுக்கு நிரந்தரப் பாதுகாப்பு என்பதை அறிந்த தாய்ப்பறவை என்ன செய்யும் தெரியுமா?

கழுகுக்குஞ்சுகள் கூட்டின் விளிம்பில் என்ன செய்வதென்று அறியாமல் வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டு இருக்கும் அந்தக் கட்டத்தில் தாய்ப்பறவை அந்தக் குஞ்சின் உணர்வுகளை கொஞ்சம் கூட லட்சியம் செய்யாமல் குஞ்சைக் கூட்டிலிருந்து வெளியே தள்ளி விடும்.

அந்த எதிர்பாராத தருணத்தில் கழுகுக்குஞ்சு கஷ்டப்பட்டு சிறகடித்துப் பறக்க முயற்சி செய்கின்றது. முதல் முறையிலேயே கற்று விடும் கலையல்ல அது.

குஞ்சு காற்றில் சிறகடித்துப் பறக்க முடியாமல் கீழேவிழ ஆரம்பிக்கும் நேரத்தில் தாய்க்கழுகு வேகமாக வந்து தன் குஞ்சைப் பிடித்துக் கொள்கிறது. குஞ்சு மீண்டும் தாயின் பிடியில் பத்திரமாக இருப்பதாக எண்ணி நிம்மதியடைகிறது. அந்த நிம்மதி சிலநொடிகள் தான் நீடிக்கும். தன் குஞ்சைப் பிடித்துக் கொண்டு வானுயரப் பறக்கும் தாய்க்கழுகு மீண்டும் அந்தக் கழுகுக்குஞ்சை அந்தரத்தில் விட்டு விடுகிறது

மறுபடி காற்று வெளியில் சிறகடித்துப் பறக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அந்தக் குஞ்சு உள்ளாகிறது.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்



இப்படியே குஞ்சை வெளியே தள்ளி விடுவதும், காப்பாற்றுவதுமாகப் பல முறை நடக்கும் இந்தப் பயிற்சியில் கழுகுக் குஞ்சின் சிறகுகள் பலம் பெறுகின்றன. காற்று வெளியில் பறக்கும் கலையையும் விரைவில் கழுகுக்குஞ்சு கற்றுக் கொள்கிறது.

அது சுதந்திரமாக, ஆனந்தமாக, தைரியமாக வானோக்கிப் பறக்க ஆரம்பிக்கிறது. கழுகுக்குஞ்சு முதல் முறையாக கூட்டுக்கு வெளியே உள்ள உலகத்தின் பிரம்மாண்டத்தைக் கண்டு பயந்து தயங்கி நிற்கும். அந்தத் தருணத்தில் தாய்க்கழுகு அதனை முன்னோக்கித் தள்ளி விடாமல் இருந்திருந்தால் சுதந்திரத்தையும், ஆனந்தத்தையும், தைரியத்தையும் அந்தக் கழுகுக்குஞ்சுகள் தன் வாழ்நாளில் என்றென்றைக்கும் கண்டிருக்க முடியாது.

பறக்க அறியாத அந்தக் குஞ்சை கூட்டினை விட்டு வெளியே தாய்ப் பறவை தள்ளிய போது அது ஒருவிதக் கொடூரச் செயலாக பார்க்கவே கூடாது. அந்தத் தாய்க்கழுகுகின் செயல் அந்தக் குஞ்சிற்குப் "பேருதவி" என்பதை மறுக்க முடியாது. ஒவ்வொரு புதிய சூழ்நிலையும் யாருக்கும் ஒருவித பதட்டத்தையும், பயத்தையும்

ஏற்படுத்தக் கூடும். ஆனால் அந்தக் காரணத்திற்காகவே அந்த சூழ்நிலைகளையும், அனுபவத்தையும் மறுப்பது வாழ்வின் பொருளையே மறுப்பது போலத்தானே!

கப்பல் துறைமுகத்தில் இருப்பது தான் அதற்கு முழுப்பாதுகாப்பாக இருக்கும் என்று நாம் நினைத்தால், கப்பலை உருவாக்கிய முயற்சியே வீணாகிப்போகும். அதனால் நமக்கும் கப்பலுக்கும் ஒருபயனுமில்லை. கழுகிற்கும், கப்பலுக்கும் மட்டுமல்ல, மனிதனுக்கும் இந்த உண்மை பொருந்தும்.

தாய்க்கழுகு தான் குஞ்சாக இருக்கையில் தான் தள்ளப்பட்டதை எண்ணிப்பார்த்து "நான் பட்ட அந்தக் கஷ்டம் என் குஞ்சு படக் கூடாது. என் குஞ்சிற்கு அந்தப் பயங்கர அனுபவம் வராமல் பார்த்துக் கொள்வேன்" என்று நினைக்குமானால் அதன் குஞ்சு பலவீனமான குஞ்சாகவே மாறி பறக்க இயலாமல் நிற்கும்..

அந்த தாய்க்கழுகின் அறிவுமுதிர்ச்சி பல பெற்றோர்களிடம் இருப்பதில்லை.



"நான் பட்ட கஷ்டங்கள் என் குழந்தைகள் படக்கூடாது" என்று சொல்லக்கூடிய பெற்றோர்களை இன்று நாம் பார்க்கிறோம். தான் பட்ட கஷ்டங்கள் எதையும் தங்கள் குழந்தைகள் படக்கூடாது என்று நினைக்கும் போது பாசமிகுதியால் அவர்கள் அந்தக் கஷ்டங்கள் தந்த பாடங்களின் பயனைத் தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கத் தவறி விடுகிறார்கள்.

தேவையே இல்லாத கஷ்டங்களை பிள்ளைகள் படத் தேவையில்லைதான். ஆனால் 'எந்தக் கஷ்டமும், எந்தக் கசப்பான அனுபவமும் என் பிள்ளை படக்கூடாது' என்று நினைப்பது அந்தப் பிள்ளையின் உண்மையான வளர்ச்சியைக் குலைக்கும் செயலே ஆகும்.


வாழ்க்கையில் சில கஷ்டங்களும், சில கசப்பான அனுபவங்களும் மனிதனுக்கு அவசியமானவையே. அவற்றில் வாழ்ந்து தேர்ச்சி அடையும் போது தான் அவன் வலிமை அடைகிறான். சில கஷ்டங்கள் பிள்ளைகள் படும் போது பெற்றோர்களுக்கு மனம் வலிக்கத்தான் செய்யும். கஷ்டங்களே இல்லாமல் இருப்பது வாழ்க்கை அல்ல. அதுவாழ்க்கையின் அர்த்தமும் அல்ல. அது ஒருநாளும் சாத்தியமும் அல்ல. எனவே நீந்தக்கற்று கொடுங்கள்! நீந்துவது அவர்களின் கடமை!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! இந்தக் கட்டுரை குறித்த தங்களின் கருத்தைப்பதிவு செய்யுங்கள் தோழர்களே! என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

# நமது நல்வாழ்த்துக்கள்!

சமூக வலைத்தளத்திலும், முக நூலிலும், தினமும் வாழ்வியல், ஆன்மிகம், மருத்துவம், வணிக மேலாண்மை, தன்னம்பிக்கை ஊட்டும் சிந்தனைகள் என பல்வேறு தலைப்புகளில், "தினம் ஒரு சிந்தனை!" என்ற தலைப்பில் கடந்த எட்டு ஆண்டுகளுக்கு மேலாக எழுதி வரும் சிறந்த எழுத்தாளர், பேச்சாளர் கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா அவர்கள் தனது 3000-மாவது பதிவினை 09-12-2024 அன்று பதிவு செய்துள்ளார்கள். அவரது பதிவினை ஆயிரக் கணக்கானோர் பாராட்டியும், பின்பற்றியும் வருகிறார்கள். அவரது பதிவுகள் இதுவரை இரண்டு புத்தகங்களாக, "தினம் ஒரு சிந்தனை!" மற்றும் "நாளும் ஒரு நற்கருத்து!"என்ற தலைப்பில், சென்னை ஜீவா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. நமது இதழுக்கும் தொடர்ந்து எழுதும் கவிஞர் அவர்கள் தொடர்ந்து, பல்லாண்டுகள் எழுதி சாதனை படைத்திட, நாம் நகரத்தார் மின்னிதழ் தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறது



விலை:

ரூபாய்
46/-




முருகப்பெருமானின் கைவேலை போற்றும் வேல்மாறல் மந்திரம்
இப்போது எளிதில் புரிந்து பாராயணம் செய்யும்
வகையில் புத்தக வடிவில்!

# வினைகள் தீர்க்கும் வேல் மாறல் மகா மந்திரம்

(வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த ஸ்வாமிகள் தொகுத்தருளியது)

விலை: ரூபாய் 46/– ( தபால் செலவு தனி )
வெளியீடு: அனுஷம் புக்ஸ்

வேல் மாறலின் அற்புதத்தை தினமும் பாராயணம்
செய்து உணருங்கள் ..

புத்தகத்தினை ஆர்டர் செய்ய : 96590 32994 என்ற
வாட்சப் எண்ணில் தொடர்பு கொள்ளவும்

# புத்தக வெளியீடு :







கோவை அனுஷம் புக்ஸ் சார்பில் நமது நாம் நகரத்தார் மின்னிதழ் பதிப்பாசிரியர் திரு.இராம.சொக்கலிங்கம் நூலாக்கம் செய்த " வினைகள் தீர்க்கும் வேல் மகா மந்திரம் " என்னும் நூலின் வெளியீட்டு நிகழ்வு முருகனின் முதற்கற்றளிக் கோயிலான திருமயம் வட்டம் கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் திருக்கோயிலில் 13.12.2024 திருக்கார்த்திகை தினத்தன்று நடைபெற்றது. நூலினை ஸ்ரீ விசாலம் சிட்பண்ட் லிமிடெட் இயக்குநர் திரு.உமாபதி அருணாசலம் அவர்கள் வெளியிட முதல் பிரதியை காரைக்குடி இராமசாமி தமிழ்க் கல்லூரி பேராசிரியர் திரு.கு.அன்பு மெய்யப்பன் பெற்றுக்கொண்டார்கள். சிவாச்சாரியார் சுப்ரமணியன் அவர்கள் தலைமையேற்க நடந்த நிகழ்வில்  ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம், பத்திரிக்கை அன்பர்கள் ,கிராம மக்கள் திரளாக கலந்து கொண்டனர். சுந்தரம் சிவச்சாரியார் நன்றியுரை தெரிவித்தார். நிகழ்வுக்கான ஏற்பாடுகளை கண்ணனூர் அருள்மிகு பாலசுப்ரமண்யர் வழிபாட்டுக்கு குழு உறுப்பினர் திரு .சங்கர் அவர்கள் செய்திருந்தார்கள்.

# "இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி –12



– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!

### அறக்கப் பறக்க

"அப்பச்சி என்னாச்சி! அறக்கப்பறக்க ஓடிவர?" என்று விரைவாக வரும் பேரனை கேட்கும் ஆயாக்களைப் பார்த்திருக்கலாம். மிக விரைவாக வருவதைக் குறிக்க இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. பற – பறக்க – விரைவாக எனப் பொருள்படுகிறது. ஆக, அவசரமாக, விரைவாக வருவதைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.



### அறுத்துக்கட்டுதல்

அறுத்துக் கட்டுதல் என்பது மறுமணத்தைக் குறிக்கும். கணவனை இழந்தோ அல்லது விவாகரத்துச் செய்யப்பட்டோ தாலி நீங்கிய பின், மறுதாலி கட்டி மணப்பது அறுத்துக் கட்டுதல் என்றழைக்கப்படுகிறது. அறு – அறுத்தல், கட்டுதல் – தாலி கட்டுதல் என்ற பொருளில் வரும்.

## அறுபதாங் கல்யாணம்

"ஆத்தா! வள்ளி, பள்ளத்தூர் சோமசுந்தரஞ் செட்டியாரு அறுபது சாந்தி பண்ணிக்கிறாக! பத்திரிக்கை வச்சிருக்காக! மறந்துறாம போயிறனும்" என்பது வழக்கமாக இன்றும் அடிக்கடி பயன்படுத்தும் வாக்கியம். அறுபது வயது நிறைந்த கணவன், மனைவி உயிரோடு இருப்பின், மறுமண விழாப் போல் செய்து கொள்வது அறுபதாங் கலியாணம் என்றழைக்கப்படுகிறது. அறுபது – அறுபது வயது. கலி – மகிழ்ச்சி, பெருக்கம். யாணம் – நன்மை, மங்கலம், புது வருவாய், செழிப்பு எனப் பல பொருள் தருகிறது. அறுபது வயதில் நடக்கும் மங்கல நிகழ்வு என இதைக் கொள்ளலாம்.



அறுபது என்ற ஒரு அளவு கோள் இங்கு பயன்படுத்தப்படுகிறது? ஏன்? என்ற கேள்வி எழலாம். அறுபது நாழிகை ( ஒரு நாள்), அறுபதாங் குருவை(அறுபது நாளில் விளையும் நெல் வகை), அறுபதாங் கோழி (அறுபது நாளுக்கு ஒரு முறை முட்டையிடும் கோழி), அறுபதாண்டுச் சக்கரம்(அறுபது ஆண்டுகள் சுழற்சி), அறுபதாண்டுப் பயன்(அறுபது வருசப் பலன்), முதலிய கால வரம்புகளும், கணிப்புகளும், நிகழ்ச்சிகளும் அறுபது என்ற எண்ணைக் கொண்டிருப்பதை நோக்கி, அறுபதாங் கலியாணம் என்பது முன்னோர்களால் வகுக்கப்பட்டிருக்கலாம்.

உலக வாழ்க்கை என்பது இல்லற வாழ்க்கையே. ஒருவரின் வாழ்வென்பது முழுமை அடைவது அறுபதாண்டுகள் என்று கருதப்படுகிறது. அதன் பொருட்டு அதனை ஒரு எல்லையாகக் கொண்டு, அவ்வெல்லை கடந்தவரின் வாழ்வு என்பது ஓய்வு பெற்ற ஒருவர் மீண்டும் பணியில் நீடிப்பது போன்று கருதப்பட்டுள்ளது. அம் மகிழ்ச்சியைக் கொண்டாடும் விதத்திலும், இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்திலும் அறுபதாங் கலியாணம் நடத்தப்படுகிறது.

### அறை குறை

"அந்தப் பட்டுக்கெடப்பான்! செய்யிற வேல பூரா அறகொற வேல. இவனக் கூப்புடாதீகன்னு சொன்னா கேக்குறீகளா? " என்ற ஆச்சிகளின் அங்கலாப்புகள் காதில் விழுந்துகொண்டே இருக்கும். அறை குறை என்பது முற்றுப் பெறாமை, முழுமை பெறாமை என்ற பொருள்களைத் தரும். அந்த வகையில் முழுமை பெறாத செயல்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

### அணத்துதல்



"ராத்திரி பூரா பிள்ளை அணத்திக்கிட்டே இருந்தானே? என்ன பண்ணுது?"என்பது இரவு முழுவதும் உடல் சுரத்தினால், அல்லது வேறு உடல் நோவினால் முணங்கிக் கொண்டே இருப்பதைக் குறிக்கிறது. அணத்துதல் என்பது முணங்குவதைக் குறிக்கும்.

### ஆக்கப் பொறுத்தல்

"ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா? இன்னும் ரெண்டு நாள் பொறுத்திருந்தீனா அவுகளே வந்திருப்பாக.

காரியத்தக் கெடுத்துட்டியே அப்பச்சி! "என்ற உரைநடையில், ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கக் கூடாதா? என்பது ஒரு பழமொழி. ஆக்குதல் என்பது உணவை ஆக்குதல், உணவு தயாரிப்பதற்கு நேரமானாலும் அதற்காகப் பசியோடு பொறுத்திருந்து விட்டு, சோறை தட்டில் போட்டவுடன் கொதிக்கும் சோற்றில் கையை வைத்தால் சுட்டுவிடும். இன்னும் சிறிது நேரம் பொறுத்திருந்தால், உணவை முழுமையாக, திருப்தியாக உண்ணலாம். அது போல ஒரு செயல் முடிய உரிய காலம் வரை பொறுத்திருந்தால் வெற்றி காணலாம். அவரசப்பட்டால் அக்காரியம் கைகூடாது என்பதற்காக உருவாக்கப்பட்டது இச்சொல்.

## ஆக்கிப் போடல்



"இந்த மனுசனுக்கு எத்தனை காலம் ஆக்கிப் போட்டிருப்பேன். பொசுக்குன்னு இப்படி கேட்டுப்புட்டாரே" என்பதில் ஆக்கிப் போடல் என்பது உணவைத் தயாரித்துக் கொடுத்தல் என்று பொருள் படும். குழந்தை பிறக்கும் போது, மகளை வீட்டிற்கு அழைக்கும் தாய் வீட்டார் அளிக்கும் விருந்தும் ஆக்கிப் போடல் என அழைக்கப்படுகிறது.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

## ஆச்சி



"மங்கை ஆச்சிமாதிரி ஒரு நல்லவுகள பாக்கவே முடியாது. அதிர்ந்து ஒரு வார்த்த பேச மாட்டாக" என்று ஆச்சிமார்கள் ஒருவரை ஒருவர் மெச்சிக் கொள்வதைக் காணலாம். ஆச்சி என்பது நகரத்தார் பெண்களைக் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. "யாய்" என்ற பழந்தமிழ்ச் சொல்லே பிற்காலத்தில் "ஆய்" என்றாகியிருக்க வேண்டும். "யாயும் ஞாயும் யாரா கியரோ?" என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் அதனை உணர்த்தும். ஆய் என்பது தாயைக் குறிக்கும். ஆய் என்னும் சொல்லே பிற்காலத்தில் ஆச்சி எனத் திரிந்திருக்கிறது. ஆய் – ஆய்ச்சி – ஆச்சி என்றானது.

## ஆட்ட பாட்டம்

"தெற்குத் தெரு சுந்தரம் ஆட்டமா ஆடுனான். இப்ப பாரு! அவன் ஆட்டபாட்டமெல்லாம் அடங்கிப் போச்சு" ஆட்டபாட்டம் என்பதற்கு ஆர்ப்பாட்டம் என்பது பொருள்.

– தொடர்ந்து பேசுவோம்

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NCF

## Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

### Branches

| | | | |
|---|---|---|---|
| **Madurai Main**<br>98430 93250 | **Trichy**<br>98432 91654 | **Arasaradi/mdu**<br>73391 25777 | **Thirunagar/mdu**<br>84899 10191 |
| **Dindigal**<br>98432 91652 | **Coimbatore**<br>82200 52338 | **Erode**<br>75581 99888 | **Srivilliputhur**<br>70944 61192 |
| **Anna Nagar/mdu**<br>98432 91653 | **Reserveline/mdu**<br>98430 93256 | **Aruppukkottai**<br>73589 91777 | **Dindigul (Regl.)**<br>75581 99777 |

# சைக்கிள்

வாகன வரிசையில் முதல்படி சைக்கிள்
வாகன அமைப்பில் அடிப்படை சைக்கிள்

மிதித்தால் கூட நம்மை முன்னேற்றும்
ஏழையின் விமானமாய் அவரை விண்ணேற்றும்

பெட்ரோல் டீசல் தேவையில்லை
பெற்றோரும் சைக்கிளும் வேறுயில்லை

விலையில்லா கல்வியை சைக்கிளால் பெறவே
விலையில்லா சைக்கிளை அரசும் தருதே

அரைப் பெடல் ஓட்டி பழகினோம் அன்று
குரங்கு பெடல் என்ற புனைப் பெயர் கொண்டு

வாடகை சைக்கிளும் பிடிக்க ஒரு ஆளும்
சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ள போதும்

சைடுவீல் கொண்டு கற்றுக் கொள்ளும் காலம்
எவரும் தேவையில்லை நமக்கு நாமே போலும்

ஆணுக்கு,பெண்ணுக்கென இருவகை உண்டு
இருப்போர் இல்லாதோர் சைக்கிளுக்கு ஒன்று

சாலையில் உருண்டே நகர்ந்திடும் சைக்கிள்
காலையில் பயிற்சிக்கு நகராத சைக்கிள்

ரோல்ஸ் ராய்ஸ் ஓட்டும் முதலாளி வாழ்வில்
முதலாய் ஓட்டிய வாகனம் சைக்கிள்.



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும் Return gift Purpose க்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# வாழ்த்தி மகிழ்கிறோம்





கோலாலம்பூர் (தமிழகம் – தேவகோட்டை)
திரு.KR.P.இராமன் –திருமதி. ராம. லெட்சுமி தம்பதிகளின் மகள்
திருவளர்ச் செல்வி R.பெத்தாள் என்ற சொர்ணாவுக்கும்
கோலாலம்பூர் (தமிழகம் – பூலாங்குறிச்சி)
தெய்வத்திரு. சுப.ராம. சுப்பிரமணியம் செட்டியார் –திருமதி வெள்ளச்சி (எ)
உண்ணாமலை ஆச்சி தம்பதிகளின் மகனுமாகிய நிறைநாட் செல்வன்
S.நடராஜனுக்கும் 5.12.2024 வியாழக்கிழமை தேவகோட்டையில்
மணமகள் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள்
வளம் பல பெற்று நலமுடன் வாழ நாம் நகரத்தார் மின்னிதழ் வாழ்த்துகிறது.

# பிள்ளையார் சுழியின் தத்துவம்..!!!

சுழியை வளைவு "வக்ரம்"என்றும் சொல்வர். பிள்ளையாரின் தும்பிக்கை நுனியைப் பார்த்தால், வளைந்து சுருண்டிருக்கும். இதனால் அவரை "வக்ரதுண்டர்" என்றும் அழைப்பதுண்டு.



வாக்கு, வளம், செல்வம், தொழிலில் மேன்மை, பெருமை, உருவப்பொலிவு இவையாவும் ஆனைமுகத்தானை வணங்குபவருக்கு கிடைக்கும்ன்னு சொல்வாங்க. இப்படி எதை செய்தாலும் ஆனைமுகத்தானை வணங்கி செய்வது நம் வழக்கம். அந்த பழக்கம் செயலில் மட்டுமில்லை. எழுதுவதிலும் உண்டு.

பிள்ளையார் தடைகளை விலக்குபவர் என்பதால், நாம் தொடங்கும் எந்தச் செயலும் தடையில்லாமல் நடக்கப் பிள்ளையாரை வணங்கி அல்லது பிள்ளையார் சுழி – உ போட்டுத் தொடங்க வேண்டும் என்பது வழக்கம்.

அந்த காலத்தில் பனைஓலை நறுக்கில் எழுத்தாணியால் எழுதினாங்க. பனை ஓலையின் தரத்தினையும், எழுத்தாணியின் கூர்மையையும் சோதிக்க அப்படியொரு ஏற்பாடு உண்டாகியும் இருக்கலாம்ன்னும் ஒரு வாதம் உண்டு.

இனி உண்மையான காரணம் என்னன்னு பார்க்கலாம்..

பிள்ளையார் தடைகளை விலக்குபவர் என்பதால், நாம் தொடங்கும் எந்தச் செயலும் தடையில்லாமல் நடக்கப் பிள்ளையாரை வணங்கி அல்லது பிள்ளையார் சுழி – உ போட்டுத் தொடங்க வேண்டும் என்பது வழக்கம்.

'ஓம்'ன்றது பிரணவ மந்திரம். இந்த 'ஓம்' என்ற மந்திரத்துக்கு பிறகே எந்தவொரு கடவுளின் பெயரோ அல்லது மந்திரமோ வரும். 'ஓம்' என்பதை அ+உ+ம் என பிரிக்கனும். அதாவது, அ, உ, ம் இந்த எழுத்துகளின் உச்சரிப்பின் கூட்டே 'ஓம்'. இதில் 'அ'என்பது படைத்தலையும், 'உ'என்பது காத்தல் என்பதையும், 'ம்'என்பது அழித்தலையும் குறிக்கும்.

'அ' என்பது வாழ்வின் ஆரம்பத்தை குறிக்கும். 'உ'என்பது மெய்,வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களை குறிக்கும். இந்த ஐம்புலன்களை அடக்கிக்கொண்டால் ஆயுள் கூடும். ஆயுள் கூடக் கூட நம் விருப்பங்கள் தங்கு தடையின்றி நடக்கும். மேலும் 'உ; என்பது காத்தல் எழுத்து என்பதால், இறைவன் நம்மைப் பாதுகாப்பதைக் குறிக்கிறது. நம் செயல்கள் தடையின்றி நடக்க வேண்டுமானால், நமக்கொரு பாதுகாப்பு வேண்டும். இதற்காகவே, 'உ' வடிவத்தை எழுதுகிறோம்.

'உ' எப்படி பிள்ளையார் சுழி ஆனதுன்னும், இந்த ஒற்றை இனி பார்க்கலாம்.



பிள்ளையார் சுழியை, 'உ' என எழுதும்போது, முதலில் ஒரு சிறு வட்டத்தில் துவங்குகிறது. வட்டத்திற்கு முடிவே கிடையாது. விநாயகரும் அப்படித்தான். அவரை அறிந்து கொள்வது என்பது பிரம்மபிரயத்தனம். வட்டம் என்பது இந்த பிரபஞ்சத்தை குறிக்குது. இதற்குள் பல வித உலகங்களும், வானமண்டலமும் அடங்கியுள்ளது. அதாவது, விநாயகப் பெருமானுக்குள் சர்வலோகமும் அடக்கம். அவரது பெருவயிறும் அதையேதான் காட்டுகிறது. அந்த வயிற்றுக்குள் அவர் சர்வலோகத்தையும் அடக்கியுள்ளார் என்பது நம்பிக்கை.



'உ' எனும் சுழியில் வட்டத்திற்குப் பிறகு, ஒரு நேர்கோடு நீள்கிறது. இதை சமஸ்கிருதத்தில், 'ஆர்ஜவம்' என சொல்வர். இதற்கு, 'நேர்மை' எனப் பொருள். 'வளைந்தும் கொடு, அதேச்சமயம் நேர்மையை எக்காரணம் கொண்டும் விட்டு விடாதே..' என்பதே இந்த பிள்ளையார் சுழியின் தத்துவம்.

வட்டவடிவிலான எந்த பொருளும் சுழல அச்சு வேண்டும். தெய்வாம்சம் நிரம்பிய சக்ராயுதமே விஷ்ணுபகவானின் விரலினை அச்சாகக்கொண்டுதான் சுற்றுகிறது. உலக உருண்டை உருள அச்சு எதுமில்லைன்னு அறிவியல் சொன்னாலும், நம் கண்ணுக்கு தெரியாத ஏதோவொரு சக்தி இவ்வுலகை நேர் அச்சில் தாங்கி இருக்கு.



இவ்வுலகில் வாழும் அனைத்து உயிர்களும் பிள்ளையார் சுழியிலிருக்கும் நேர்க்கோட்டைப் போல நேர்மையை கடைப்பிடிக்கனும்ன்னு இச்சுழி உணர்த்துது. அதேப்போல, வியாபாரத்தில் உ பிள்ளையார் சுழி போட்டு அதன்மேல் லாபம்ன்னுஎழுதுவாங்க. இவ்வியாபாரத்தில் கிடைக்கும் லாபம் நேர்வழியிலானதாக இருக்கட்டுமென்பதே இதன் பொருள். முதன்முதலில் எழுத்துவடிவத்தை கொண்டுவந்தவர் பிள்ளையார். எழுத்துவடிவில் தோன்றிய முதல்நூல் வியாச பாரதம்.

அதனால், பிள்ளையார் சுழி போட்டு எதையும் தொடங்குவோம்...

## கொடுத்தால்தான் கிடைக்கும்!



வாரியார் சுவாமிகள், தோளில் சத்சங்கத்தினர் போட்ட மாலையை அணிந்தபடியே பேசுவது வழக்கம்.

திருவாரூரில் சொற்பொழிவு ஒன்றின்போது சுவாமிகளுக்கு, மாலை அணிவிப்பதற்காக அன்பர் ஒருவர் வந்தார்.

ஏற்கெனவே சுவாமிகளின் கழுத்தில் மாலை இருந்ததால், தன்னிடம் இருந்த மாலையை அணிவிக்காமல் கையில் வைத்தபடியே நின்றார்...

புரிந்து கொண்ட சுவாமிகள், தோளில் கிடந்த மாலையைக் கழற்றி, அருகில் இருந்தவரிடம் கொடுத்தார். இதற்காகவே காத்திருந்தவர் போல், சுவாமிகளுக்கு மாலை அணிவித்தார் அந்த அன்பர்...

ஆடியன்ஸைப் பார்த்து சுவாமிகள், "எப்போதும் நம்மிடம் இருப்பதை எவருக்காவது கொடுத்தால்தான், அடுத்தவர்கள் நமக்குக் கொடுப்பார்கள்" என்றார்.

# பிள்ளையார் பெருங்கதை - விரதம்

– ஆ.தெக்கூர் கண.இராம.நா. இராமநாதன்



விநாயகர் விரதங்கள் பல. அவற்றுள் கார்த்திகை மாசம் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாதம் வளர் பிறை சஷ்டி வரையும் உள்ள இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கும் விரதமும் ஒன்றாகும். இது விநாயக சஷ்டி என்றும் மார்கழி சஷ்டி, குமார சஷ்டி, பெருங்கதை விரதம், பிள்ளையார்நோன்பு என்றும் கூறப்பெறுகிறது. கார்த்திகைத் திங்கள் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழித் திங்கள் (வளர்பிறை) சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு நாளும் இந்த விரதம் கடைப் பிடிக்கப்பெறுகிறது.

சைவர்களுக்கும், காணாபத்தியர்களுக்கும் இக்காலம் மிகவும் புனிதமான காலமாகும்.



இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளான கிழக்கு மற்றும் வடக்கு பகுதிகளில் இன்றும் உயிர்ப்புடன் உள்ளது. யாழ்ப்பாணத்தில் இருபத்தொரு நாளும் நியமமாக விநாயக வழிபாடு நடைபெறும் ஆலயங்கள் பல இன்றும் உள்ளன. சாந்தை சித்தி விநாயகர் ஆலயத்திலும், பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்திலும் இவ்விழா வெகு சிறப்பாக கொண்டாடபெறுகின்றது.



இருபத்தோரிழையோடு கூடிய காப்பை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டி விரதத்தை ஆரம்பிப்பர். முதல் இருபது நாட்களும் ஒருவேளை உணவு உண்டு இறுதி நாள் நோன்பு இருந்து சுவாமி தரிசனம் செய்து உணவுண்டு இவ்விரதம் நிறைவு செய்யப்படும். இருபத்தொரு நாட்களும் விநாயகரது கதை கேட்பதும், விநாயகர் திருவிளையாடல்களைப் பேசக் கேட்பதும் புண்ணியமாகும். விநாயகர் ஆலயங்களில் விசேட அபிஷேகங்கள், பூசைகள் நடைபெற்றபின் அகத்திய முனிவரால் எழுதப்பட்ட பிள்ளையார் கதையை கற்றுத் தேர்ந்தோர் பாடிப் பயன் சொல்ல விரதமிருப்போர் இருந்து கேட்டுப் பயன்பெறுவர்.

இப்படிச் செய்ய இயலாதோர் மார்கழி மாத விநாயகர் சஷ்டியினன்று விரதம் இருப்பது சிறப்பாகும். மறுநாள் காலையில் கையில் கட்டியிருந்த நோன்புக் கயிற்றைக் கழற்றிய பின்னர், விநாயகரை வழிபாடு செய்து விரதத்தை முடிப்பர்.தன வைசியர்கள் என்று அழைக்கப்படும் நகரத்தார்களும், மரகத விநாயகரைச் சஷ்டிவரை நோன்பிருந்து மிகவும் சிறப்பாக வழிபாடு செய்து வருகின்றனர்.

பிள்ளையார் பெருங்கதையின் சுருக்கம் பின்வருமாறு. ஒருமுறை சிவனும், பார்வதியும் சொக்கட்டான் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த மகா விஷ்ணு, சிவபெருமானுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்லும்நிலை ஏற்பட்டது. இதனால் பார்வதி தேவி கடும் கோபம் கொண்டாள். மகா விஷ்ணுவை குருட்டு மலைப்பாம்பாக போகும்படி சாபம் இட்டார்.



விஷ்ணுவுக்கு ஆறுதல் கூறிய சிவபெருமான், சுயமுகாசுரனின் வதம் நடைபெறும் வரை பொறுமையாக காத்து இருக்கும்படி கூறினார். அதன்படி விஷ்ணுவும் மலைப்பாம்பாக மாறி ஆலமர பொந்தினுள் இருந்து விநாயகரை வேண்டி தவம் இருந்தார்.

சில நாட்களில் சுயமுகாசுரனை வதம் செய்து விநாயகர், அவனுக்கு முக்தி அளித்தார். பிறகு அவர் தன் இருப்பிடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்த போது, ஆலங்காட்டில் மலைப்பாம்பாக இருந்த மகாவிஷ்ணுவை கண்டார்.



விநாயகரின் பார்வை பட்டதுமே விஷ்ணு தன் சுய உருவைப் பெற்றார். இதனால் மகிழ்ச்சி அடைந்த விஷ்ணு, 'விநாயகரே எனக்கு காட்சி அளித்து மகிழ்ச்சி கொடுத்த மார்கழி சஷ்டி தினத் தன்று, உம்மை யார் வழிபட்டாலும் அவர்கள் துன்பம், துயரங்களில் இருந்து விடுதலை பெற்று நினைத்ததை பெற அருள் புரிய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெருங்கதை விரதத்தை மிகுந்த பயபக்தியோடு கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்பதனை எடுத்து சொல்லும் வகையில் சொல்லப்படும் நிகழ்வு. ஒருமுறை விக்கிரமாதித்தனின் மனைவியான இலக்கண சுந்தரி, இவ்விரதத்தைக் கடைப்பிடித்தாள். ஆணவம் மிகுதியால், இடையில் நோன்பை கைவிட்டு, கையில் கட்டியிருந்த கயிற்றை கழற்றி எறிந்தாள். அதன் விளைவாக, அவளது கணவன் விக்கிரமாதித்தனால் துரத்தப்பட்டு,

காட்டிலேயே சில காலம் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். பின்னர் காட்டில் இருந்தபடியே விநாயகர் சஷ்டி விரதத்தை கடைப்பிடித்து, பிரிந்த தனது கணவருடன் சேர்ந்தாள் என்பது புராணக் கதை.



பிள்ளையார் பெருங்கதை விரதம் இருப்பவர்கள் சாபம், தோஷங்கள் நீங்கப்பெற்று முக்தி பெறலாம் என்பது நம்பிக்கை. முழுவிரதம் இருந்து விநாயகர் சஷ்டியை கடைபிடிப்பவர்களுக்கு வாழ்வில் என்றும் குன்றாத செல்வம் சேரும் என்பதும் சைவர்களின் நம்பிக்கை.

நன்மை நாடொறும் நம்மை நணுக விநாயகப் பெருமானைப் போற்றி நலம் பெறுவோமாக.




வாரியார் வாக்கு

**வயலில் தூவப்படும் சில விதைகளே, பல ஆயிரம் மடங்கு பயிர்களை திருப்பித் தருகின்றன. அதைப்போலவே, ஒருவர் செய்யும் நன்மையும் தீமையும் அவர்கள் செய்ததற்கு ஏற்றவகையில் பல மடங்காகப் பெருகி, அவரிடமே திரும்ப வந்துசேரும்.**

# பிள்ளையார் நோன்பின் தோற்றமும் வரலாறும்

**இந்நூலில் நகரத்தார்கள் ஏன் பிள்ளையார் நோன்பு கொண்டாடுகிறோம் என்ற வரலாறும் பிள்ளையார் நோன்பின் மகத்துவம் பற்றிய பல கட்டுரைகளும் உள்ளன.**




## விலை ரூ 30/-

- 10 பிரதிகளுக்கும் குறையாமல் வாங்க வேண்டும். தபால் செலவு தனி!
- 20 பிரதிகளுக்கு மேல் வாங்குபவர்களுக்கு எங்கள்செலவில் அனுப்பி வைக்கிறோம் !


## முல்லை பதிப்பகம்

323/10, கதிரவன் காலனி
அண்ணாநகர் மேற்கு, சென்னை–10
செல்: 9840358301

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA

## கணபதி கணபதி



கணபதி கணபதி கணபதியே
… கருணை பொழிவாய் கணபதியே
வணக்கம் சொல்வோம் கணபதியே
… வளங்கள் எமக்கும் அருள்வாயே
துணியும் செயலில் நீநின்று
… துணையாய் நிதமும் வருவாயே
பணிந்தோம் கணபதி நின்பாதமே
… பலனாய் வெற்றிகள் தந்தாயே

## கனத்த மீசை பாரதி

கனத்த மீசை பாரதி
… கவிதை சொல்லுவார்
நினைத்த நல்ல சேதியை
… நிமிர்ந்து சொல்லுவார்
உனக்கும் எனக்கும் நீதிகள்
… ஒன்று என்பதை
உலக மெங்கும் ஒலித்திட
… உறக்கச் சொல்லுவார்!



பெண் கதவு... ஆண் பூட்டு..! – 12

# அன்புப் பரிசு



நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

"தோள்கள் நெருக்கமான நேரத்தில் காட்டும் அன்பைவிட தோல்கள் சுருக்கமான நேரத்தில் காட்டும் அன்பிற்கே ஆயுள் அதிகம்".

அன்பும், நற்பண்புகளும் நிலவும் இல்லமே நல்லறமாகக் காட்சித் தரும் கூட்டுக்குடும்பங்களில் அன்பே ஆட்சி புரிய வேண்டும். அதிகாரம் தலை தூக்கினால் அது வெறுப்பாக மாறி, குடும்ப நிம்மதியைச் சீர்குலைக்கும். வையகத்தில் இன்புற்று வாழ அன்பை கைப்பொருளாகக் கொள்தல் அவசியம். எளியோரின் மீது அதிகாரத்தைச் செலுத்தினால், எதிர்வினையாகத் திரும்பும். பாதிப்பும் அதிகமாகும்.

ஒரு பணக்கார மாமியாருக்கு மூன்று மருமகன்கள், இவர்கள் மூவரில் தன்மீது அன்பு அதிகம் கொண்டவர்கள் யார் ? என்ற சந்தேகம் மாமியாருக்கு நீண்ட நாட்களாக இருந்தது. அதை பரிசோதனை செய்து பார்ப்பது என்று மாமியார் முடிவெடுத்தார்.



மூத்த மருமகனோடு ஒரு நாள் படகுப்பயணம் மேற்கொண்டார். படகின் நடுவழியில் 'தொபுக்' கென்று தண்ணீரில் தற்செயலாக விழுவது போல விழுந்தார் மாமியார். உடனே மூத்த மருமகன தன் உயிரையும் பொருட்படுத்தாது, தண்ணீரில் குதித்துக் காப்பாற்றினான், மறுநாள் அவன் வீட்டு வாசலில் ஒரு புத்தம் புதிய மாருதி மகிழுந்து, அதில் ஒரு வாசகம் எழுதி அலகரிப்பட்டு இருந்தது.

'மாமியாரின் அன்புப் பரிசு' மகிழ்ந்து போன மூத்த மருமகன் அன்றிலிருந்து பணிந்தும் போனான், அதே போல இரண்டாவது மருமகனுக்கும் இதே தேர்வை வைக்க, அவனும் விழுந்து காப்பாற்றி அன்புப்பரிசாக மகிழுந்தைப் பெற்றான். மூன்றாவது மருமகனுக்கும் அதே சோதனை... தண்ணீரில் விழுந்து தத்தளித்த மாமியாரை, அவன் காப்பாற்றாமல் அமைதியாகச் சொன்னான்.

"போய்த்தொலை, எனக்குகாரும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம் நான் இருக்கிற வரையிலும் சைக்கிளிலே போய்க்கிறேன். பணக்காரத் திமிரில், நாயினும் கேவலமாக எங்களை நடத்தினாய் அல்லவா, ஒழிந்து போ" என்று, அவள் முழுமையாக நீரில் மூழ்கி இறக்கும் வரை பார்த்துவிட்டு, மகிழ்ச்சியுடன் வீடு வந்தான்.



வீட்டு வாசலில் பளபளக்கும் புத்தம்புதிய மாருதி கார், மிகுந்த ஆச்சரியத்தில் வாகனத்தில் ஒட்டப்பட்ட வாசகத்தை அவன் படிக்க அதிலிருந்தது...

## 'மாமனாரின் அன்புப் பரிசு'

கணவனோ, மனைவியோ, மாமனாரோ, மாமியாரோ, நாத்தனாரோ, கொழுந்தனாரோ பணத்திமிரோடு நடந்து கொள்ளாமல், பண்புநலத்தோடு நடந்து கொண்டால் இல்லறம் இனிமையுறும். இல்லறத்தார் மேன்மை உறுவர்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram





# சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள்

–ச.முத்துலெட்சுமி, திருநெல்வேலி

திருவாடி பூரத்தில் ஜகத்துதித்தாள் வாழியே !
திருப்பாவை முப்பதும் செப்பினால் வாழியே !
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை வாழியே !
பெரும்புதூர் மாமுனிக்கு பின்னானாள் வாழியே !
ஒருநூற்று நாற்பது மூன்று உரைத்தாள் வாழியே !
உயரரங்கர்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே !
மருவாரும் திருமல்லி வளநாடு வாழியே !
வண் புதுவை நகர் கோதை மலர் பதங்கள் வாழியே !

பக்தி மார்க்கத்தில் அற்புதமான நான்கு வழிகள் இருக்கின்றன. கடவுளை குழந்தையாகவோ, உற்ற தோழனாகவோ, சேவகன் ஆகவோ அல்லது நாயக நாயகி பாவத்திலோ ஏற்று பக்தி பண்ணலாம். ஆண்டாள் ஸ்ரீ கிருஷ்ணர் மீது கொண்ட பக்தி ஒரு ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதற்கான வழியைக் காண்பிப்பது.

பல வைணவ பெரியோர்கள் ஆண்டாள் வரலாற்றை அருமையாக விவரித்து உள்ளார்கள்.எனினும் என் பார்வையில் கோதை மற்றும் கண்ணன் என்பது ஜீவாத்மா மற்றும் பரமாத்மா உணர்வை வெளிப்படுத்துவதாகும். என்றோ ஒரு நாள் எல்லா ஜீவன்களும் பரமாத்மாவுடன் ஐக்கியமாகத்தான் வேண்டும். நல்வினை செய்த ஆத்மாக்கள் தமிழ் பெருமகனார் திருவள்ளுவர் கூறுவது போல் பிறவிப் பெருங்கடல் நீந்தி உடனடியாக இறைவனை அடைவார்கள்.

ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் நாயக நாயகி பாவத்தை ஏற்று ஒரு ஜீவாத்மா பரமாத்மாவை சரணாகதி அடைவதற்கான வழியை வாழ்ந்து காண்பித்ததை இந்த சிறு தொடரில் காண்போம்

இவ்வுலகில் நமக்கு ஒரு வருடம் என்பது வானவர் உலகிற்கு ஒரு நாள். மார்கழி மாதம் என்பது அவர்களுக்கு விடியற்காலை மூன்று மணி. எனவே தான் மாதங்களில் நான் மார்கழி என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா குறிப்பிட்டு இருக்கிறார்.

கிருஷ்ணருக்காகவே படைக்கப்பட்ட அந்த தெய்வீகமான மார்கழி மாதத்தில் கண்ணனின் பரமபதத்தை அடைவதையே தன் அவதார நோக்கமாகக் கொண்ட ஸ்ரீ ஆண்டாள் நாச்சியாரையும் மார்கழி மாதத்தில் நாம் மறக்க முடியாது. ஆண்டாள் நாச்சியாருடைய பெயரை கேட்டதுமே மார்கழி மாதமும், அதிகாலையில் எழுந்து பாடும் திருப்பாவையும் நமக்கு ஞாபகம் வரும். மார்கழித் திங்கள் பாட்டுக்கு மயங்காத உள்ளங்கள் எதுவுமே இருக்க முடியாது.



மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து நீராடி, வைணவர்கள் ஆண்டாள் எழுதிய திருப்பாவையும், சைவர்கள் மாணிக்கவாசகர் எழுதிய திருவெம்பாவையும் பாடுவார்கள். நாலாயிர திவ்யப் பிரபந்தம் பெருமாளைக் குறித்துப் பாடப்பட்ட தமிழ் பக்தி பாடல்

தொகுப்பாகும். இந்து மதத்தில், வைஷ்ணவ சமயத்தில், 12 ஆழ்வார்களால் இயற்றப்பட்ட பாசுரங்களை அடக்கிய பிரபந்தங்களின் தொகுப்பு இந்த நாலாயிர திவ்யப் பிரபந்தம். இதில், ஆண்டாள் இரண்டு பிரபந்தங்கள் பாடி இருக்கிறார். அதில் ஒன்று திருப்பாவை, மற்றொன்று நாச்சியார் திருமொழி.



திருப்பாவையில் முப்பது பாசுரங்களையும், நாச்சியார் திருமொழியில், நூற்றி நாற்பத்தி மூன்று பாசுரங்களையும் ஆண்டாள் பாடி இருக்கிறார். ஆண்டாள் பாசுரங்களை மட்டுமா பாடினார்...! நாம் கண்ணனை, எப்படியெல்லாம் பார்க்க வேண்டும், கண்ணனிடம் எப்படியெல்லாம் பேச வேண்டும், கண்ணனை எப்படியெல்லாம் சரணாகதி அடைய வேண்டும் என்று தன்னுடைய அவதார நோக்கில் வாழ்ந்தே காண்பித்தார். கண்ணனை, கிருஷ்ணனை யார் மனதார நினைக்கிறார்களோ அவர்கள் கூப்பிட்ட குரலுக்குக் கண்ணன் வருவான்... என்று வாழ்ந்தே காண்பித்தார் ஆண்டாள். கண்ணன் வருவானா.... யார் கூப்பிட்டாலும் வருவானா என்று பலருடைய மனதில் சந்தேகம் எழும். ஆமாம், யார் கூப்பிட்டாலும் கண்ணன் உடனே வருவார் என்ற உயர்ந்த உண்மையையும், பக்தி மார்க்கத்தின் மூலமாகவும் சரணாகதி தத்துவத்தின் மூலமாகவும் நாம் இறைவனைச் சென்றடைய முடியும் என்பதையும் ஆண்டாள் தனது தமிழ் மொழிப்புலமை வாயிலாக, திருப்பவை பாடி இந்த உலகத்துக்கே புரிய வைத்த ஆண்டாள் உடைய வாழ்க்கை சரித்திரத்தை பார்க்கலாம்.

அர்ஜுனனுக்கு பகவத்கீதையை உபதேசம் பண்ணி விட்டு வைகுண்டத்துக்கு போனவுடனே, கிருஷ்ண பகவான் இந்த உலகத்தில் வாழும் தன்னுடைய எல்லாக் குழந்தைகளுக்கும், எளிய முறையில், கீதையின் சரணாகதித் தத்துவத்தை புரிய வைக்க விரும்பினார். கிருஷ்ண பரமாத்மாவின் ஆசையை பூர்த்தி செய்வதற்காக பூமாதேவி, நான் போய் இந்த உலகத்தில் வாழும் என்னுடைய குழந்தைகளுக்கு சரணாகதி தத்துவத்தை எடுத்துக் கூறி அவர்களை இந்த பிறவிக் கடலிலிருந்து கரை சேர்க்கிறேன்

என்று வைகுண்டத்திலிருந்து பூலோகத்திலே பூமித்தாயார் ஆண்டாளாக அவதரித்து கோதை என்ற பெயரில் பெரியாழ்வாரிடம் வளர்ந்து வருகிறார். இது தான் ஆண்டாளின் சரித்திரக் கதை.

விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் அல்லது ஸ்ரீ வில்லிபுத்தூர் என்ற ஊரில் பெரியாழ்வார் வாழ்ந்து வந்தார். அவருடைய இயற்பெயர் விஷ்ணு சித்தர். விஷ்ணு சித்தர் என்றால் விஷ்ணுவை மனதில் கொண்டவர். விஷ்ணு சித்தருடைய பெற்றவர்கள் அவர் எப்போதும் விஷ்ணுவையே தம் மனதில் நினைக்க வேண்டும் என்றும் விஷ்ணுவும் எப்போதும் இவரையே தன்னுடைய மனதில் நினைக்க வேண்டும் என்றும் அவருக்கு விஷ்ணு சித்தர் என்று பெயரிட்டார்கள். அவருடைய பெயருக்கு ஏற்ற மாதிரி அவரும் விஷ்ணு மீது அளவு கடந்த பக்தி கொண்டு, சதா சர்வ காலமும் கண்ணனையே தன் மனதில் நினைத்து வாழ்ந்து வந்தார். அவர் திருவில்லிபுத்தூர் கோவில் நந்தவனத்தில் உள்ள மலர்களை எல்லாம் பறித்து வந்து மாலை தொடுத்து அந்த மாலையை திருவில்லிபுத்தூரில் இருந்த வடபத்ரசாயி பெருமாளுக்கு தினமும் அணிவிப்பதையே தன்னுடைய தலையாய கடமையாக நினைத்து வாழ்ந்தார்.

அவ்வாறு ஒரு நாள் நந்தவனத்தில் பூக்களை பறித்து வந்து மாலை தொடுத்து கொண்டிருக்கும் போது, திடீர் என்று நந்தவனத்தில் ஒரு குழந்தை அழும் சத்தம் கேட்டது. தேடிப் பார்த்தபோது அங்கிருந்த ஒரு திருத்துலாய்ச் செடி அல்லது துளசிச்செடியின் கீழே ஒரு சிறு குழந்தை இருந்தது. துறுதுறு கண்ணும், கருகரு முடியும் இருந்த அந்தக் குழந்தை விஷ்ணு சித்தரை பார்த்து கண் அசைக்காமல் சிரித்தது. இவ்வளவு அழகான குழந்தையை தனியாக யார் விட்டுவிட்டுப் போனார்கள் என்று தேடிப் பார்த்தும், யாருமே இல்லாததால் யாரோ இந்த குழந்தையை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள் என்று நினைத்து, அந்தக் குழந்தையை கையில் எடுத்துப் பார்த்தவுடனே அந்தக் குழந்தை சிரித்தது. அந்த குழந்தையின் சிரிப்பில் மயங்கின பெரியாழ்வார் அந்தக் குழந்தையை இறைவன் தமக்குக் கொடுத்த பரிசாக நினைத்து தனது வளர்ப்பு மகளாக வளர்த்தார். அந்தக் குழந்தைக்கு, கோதை என பெயர் சூட்டினார். கோதை என்றால் அழகான மாலை என்று அர்த்தம்.





பெரியாழ்வாருக்குக் கண்ணன் மீது இருந்த ஈடுபாட்டினால் சின்ன வயதிலிருந்து கோதைக்கு கண்ணனைப் பற்றிய கதைகளையும் கிருஷ்ணனைப் பற்றிய குட்டி குட்டிக் கதைகளையும், தான் சார்ந்த வைஷ்ணவ சமயத்தின் பக்திக்கதைகளையும் நிறையச் சொல்லிக் கொடுத்து வளர்த்து வந்தார். கண்ணனைப் பற்றியே, தினமும் கேட்டுக்கேட்டு வளர்ந்த கோதைக்கு கண்ணன் மீது அளவு கடந்த பக்தி ஏற்பட்டது. எப்போதும் கிருஷ்ணர் பொம்மையவே கையில் வைத்து விளையாடும் கோதை தன் தந்தையிடம் கிருஷ்ணர் கதைகளை அடிக்கடி கூறும்படி கேட்டு, பெரியாழ்வாரும் தன்னுடைய மகளுடைய பக்தியிலும் பாசத்திலும் அப்படியே உருகிப்போய், அவருக்கும் கண்ணன் மீது இருந்த அந்த ஈடுபாட்டினால் தன் மகள் எத்தனை முறை கதை கேட்டாலும் சலிக்காமல் திரும்ப திரும்ப சொல்வார். அதைக் கேட்டுக் கேட்டு கோதை தன்னுடைய மனசு முழுவதும் கண்ணனையே நினைத்து கண்ணனுடைய நினைவாகவே வாழ ஆரம்பித்தார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கோதை வளர்ந்து வரும்போது ஒரு கட்டத்திலே அந்த பக்தி பெரிதாகி கண்ணனை சரணாகதி அடைவதையே தன் வாழ்வின் நோக்கமாக முடிவெடுத்தார்.

கோதையின் பக்தி சாதாரண பக்தி அல்ல. அளவு கடந்த அந்த பக்தியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. அதை புரிந்து கொள்ளும் அளவுக்கு மனப்பக்குவம் உள்ளவர்களால் மட்டுமே அதை உணர முடியும். ஒரு கட்டத்தில் அந்த பக்தி தீவிரமாகி தான் கண்ணனையே சரணாகதி அடைய வேண்டும் என்று மனதில் உறுதியாக நினைத்தார் கோதை. பக்தியில் மட்டும் இன்றி தமிழ்

புலமையிலும் பெயர் பெற்ற பெரியாழ்வார் தனக்கு தெரிந்த அனைத்தையும் கோதைக்குச் சொல்லிக் கொடுத்தார். அதனால்

கோதை சிறுவயதிலேயே கிருஷ்ணன் மீது அலாதி பக்தி கொண்டு கண்ணனையே சரணாகதி அடைவதாக நினைத்து, கனவு கண்டார். பெரியாழ்வார் தினமும் நந்தவனத்தில் இருக்கும் மலர்கள் எல்லாம் பறித்து, மாலை கட்டி, வடபத்திரசாயி பெருமாளுக்கு மாலையாக அணிவிப்பார். அப்படி அணிவிக்கும்போது அந்த மலர்களுடைய வாசனை கூட கண்ணனுக்கு முன் தாம் நுகரக் கூடாது என்பதால், அந்த மலர்களை பறிக்கும் போதுகூட, மூக்கில் துணியைக் கட்டிக்கொண்டு அந்த மலர்களை பறித்து, மாலையாகத் தொடுத்து வடபத்திரசாயி பெருமாளுக்கு மாலையாக அணிவிப்பார்.



இப்படி தினமும் சிந்தித்திருந்தபோது மாலையை கட்டிக் கூடையில் வைத்து பெரியாழ்வார் கிளம்புவதற்கு முன் ஆண்டாள் அவங்க தந்தைக்குத் தெரியாமல் அந்த மாலையை எடுத்து தன்னுடைய கழுத்திலே போட்டு பாத்துட்டு என்ன நினைப்பாங்க தெரியுமா, இந்த மாலையை கண்ணன் அணிந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என நினைத்து கற்பனை செய்வார்.

அப்பா வருவதற்கு முன் மறுபடியும் அந்த மாலையைக் கலையாமல் மடித்து அந்த கூடையில் வைத்து விடுவார். இது தெரியாமல், பெரியாழ்வார் அந்த மாலையை வடபத்திரசாயி பெருமாளுக்கு தினமும் சாத்தினார். ஒரு நாள் வடபத்திரசாயி பெருமாளுக்கு, அந்த மாலையை சாத்தும்போது அதில் ஒரு முடி இருந்ததை பெரியாழ்வார் பார்த்து விட்டார். மூக்கைக் கூட மூடிவிட்டு மலர் பறித்து கட்டின மாலையில் எப்படி நமக்குத் தெரியாமல் முடி வந்தது என்று பெரியாழ்வாருக்கு சந்தேகம் வந்துவிட்டது.



மறுபடியும் மலர்களைப் பறித்து வேறு ஒரு மாலை கட்டி அது பெருமாளுக்குச் சாத்த எடுத்து வைத்தார். எப்போதும் போல் ஆண்டாள் பெரியாழ்வாருக்குத் தெரியாமல், அந்த மாலையை எடுத்து, தன்னுடைய கழுத்தில் அணிந்து கற்பனை செய்து பார்த்தார். ஆனால் அன்று பெரியாழ்வார் அதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். உடனே பெரியாழ்வார் ஆண்டாளப் பார்த்து மிகவும் வருத்தப்பட்டார். ஆண்டாள் நீ இப்படி பண்ணலாமா? நான் வளர்த்த கோதை, நீ இப்படிப் பண்ணலாமா?

கண்ணனுக்கு நாம் சூடிக்களைந்த மாலையைப் போய் அணியலாமா.... கண்ணன் சூடிக்களைந்த மாலையைதான் நாம் அணிய வேண்டும் எனக்கூறி மனசு வருத்தப்பட்டு, ஆண்டாள்கிட்ட கோபித்துக் கொண்டார். அதே மன வருத்தத்தோடு மறுபடியும் மலர்களைப்பறித்து, புதிதாக ஒரு மாலையைக்கட்டி, அதை வடபத்திரசாயி பெருமாளுக்கு சாத்தினார். தன்னுடைய மனது சரியில்லாததால் அப்படியே வருத்தத்தோடு இரவு படுத்திருந்தார். அப்போது அவருடைய கனவில் கண்ணன் வந்து, என்ன விஷ்ணு சித்தா...ஏன் கவலையாக இருக்கிறாய்? எனக் கேட்க, அதற்கு விஷ்ணு சித்தர் என் மகள் கோதை உனக்குக் கட்டி வைத்திருந்த மாலையை தெரியாமல் அணிந்து விட்டாள். நானும் அது தெரியாமல் அந்த மாலையை உனக்கு அணிவித்து விட்டேன். நாங்கள் இருவரும் தெரியாமல் செய்த தவறை நீ மன்னிக்க வேண்டும் என வேண்டினார்.

அதற்கு கிருஷ்ண பரமாத்மா, இன்று நீ கடைசியாக கொண்டு வந்து, அணிவித்த அந்த மாலை எனக்குப் பிடிக்கவேயில்லை. அதில் எனக்கு நறுமணமே வரவில்லை. என்னுடைய கோதை சூடிக்களைந்து கொடுத்த அந்த மாலை தான் எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது. அதனால் எனக்கு தினமும் கோதை சூடிக் களைந்த மாலைதான் அணிவிக்க வேண்டும் என்றார். அதைக் கேட்டதும் பெரியாழ்வாருக்கு மனசு முழுவதும் மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. தன்னுடைய குழந்தை அணிந்து கொடுத்த மாலை தான் பகவானுக்கே பிடித்திருக்கிறது என ஆச்சரியப்பட்டார். அப்போதே பெரியாழ்வாருக்கு தெரிந்து விட்டது கோதை சாதாரண பெண்ணல்ல, கோதை பூமித்தாயின் அவதாரம் என்ற ரகசியம்.

உடனே பெரியாழ்வார் கோதையைப் பார்த்து பாசத்தோடு ஆண்டாள் என அழைத்தார். கோதை ஆச்சரியத்தோடு தந்தையைப் பார்க்க, பெரியாழ்வார், ஆமாம்... நீ ஆண்டவனுடைய மனதையே ஆட்கொண்டதால் இனி உன்னை ஆண்டாள் என்று அழைப்பேன். மற்றும், நீ சூடிக்கொடுத்த மாலை தானே பகவானுக்கே பிடித்திருக்கிறது.... அதனால் உன்னை சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் அழைப்பேன் என்றார். அன்று முதல் அனைவரும் கோதையை ஆண்டாள் என்றும் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி என்றும் அன்போடு அழைத்தனர்.

இப்போது கூட திருப்பதியில் புரட்டாசி மாதம் நடக்கிற பிரம்மோற்சவ உற்சவத்தின் ஐந்தாவது நாளில், திருவில்லிபுத்தூரில் கோதை சூடிக்கொடுத்த மாலை தான் வேங்கட பெருமாளுக்கு சாத்தப்படுகிறது. இந்த ஐந்தாவது நாள் தான் கருடசேவை நடக்கும் நாள். இதுபோல வருடத்தில் ஒருமுறை சித்ரா பௌர்ணமி அன்று திருமாலிருஞ்சோலை கள்ளழகர்கும் திருவில்லிபுத்தூரில் ஆண்டாள் அணிந்த மாலை தான் சாத்தப்படுகிறது. இதுதான் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளின் சிறப்பம்சம். இப்படியே ஆண்டாள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமமாக வளர்ந்து வரும் போது, பெரியாழ்வார் ஆண்டாளுக்கு திருமணம் பண்ணி வைக்க வேண்டும் என நினைத்தார். இதை ஆண்டாளிடம் தெரிவிக்க, அதற்கு ஆண்டாள், நான் மானிடர்கள் யாரையுமே திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று தன் தந்தையிடம் கூறினார்.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்



மானிடர்க்கு என்று பேச்சுப்படின் வாழகில்லேன் என்று சொல்லி பிடிவாதமாக மறுத்து விட்டார். அதைக் கேட்டு அதிர்ந்த பெரியாழ்வார், அப்படி என்றால்... நீ மானிடர்களை திருமணம் செய்ய மாட்டாய் என்றால், யாரை தான் திருமணம் செய்வாய் என்று கேட்டார். அதற்கு ஆண்டாள் சிறிது கூட தயக்கம் இன்றி நான் கிருஷ்ணனை மட்டும்தான் சரணாகதி அடைவேன் என்று உறுதியாய் கூறிவிட்டார்.

அது கேட்டு அதிர்ந்த பெரியாழ்வார் அப்படி என்றால் 108 திவ்ய தேசங்களில் இருக்கிற பெருமாளில் எந்த பெருமாள் உன் மனதில் இருக்கிறார் என்று கேட்டார். அதற்கு ஆண்டாள் 108 திவ்ய தேசங்களில் இருக்கிற எல்லா பெருமாளுடைய கதைகளையும் எனக்கு சொல்லுங்கப்பா என்று ஆவலாய் கேட்டார். பெரியாழ்வாரும் சலிக்காமல் ஒவ்வொரு திவ்ய தேசத்தின் கதையையும் ஆண்டாளுக்கு எடுத்துக் கூறினார். ஒவ்வொரு கதையாக பெரியாழ்வார் கூற, ஆண்டாள் ஆவலுடன் கேட்க, திருவரங்கத்தில்

இருக்கும் அரங்கநாதனுடைய கதையை சொல்லும் போது ஆண்டாளுடைய முகம் வெட்கத்தில் சிவந்து, திருவரங்கனை தான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்று தன் முடிவைக் கூறினார்.

ஆனால் பெரியாழ்வாரோ மானிடராய் பிறந்த நமக்கு எப்படி இது சாத்தியம் என்று கேட்க, அதற்கு ஆண்டாள் சிறிதும் தயக்கம் இன்றி கண்ணன் மீது நமக்கு மிகுந்த பக்தி இருந்தால் நாம் கண்ணனை எளிதாக சரணாகதி அடைய முடியும் என்று ஆணித்தரமாய் தன் முடிவைக் கூறினார். அதன் பின் ஆண்டாள் சதா சர்வ காலமும் கண்ணனுடைய நினைவிலையே மூழ்க ஆரம்பித்தார். தான் கண்ணனை எப்படி சரணாகதி அடைவது, எப்படி கண்ணனோடு ஐக்கியமாவது என்ற சிந்தனையிலேயே நிரம்பி இருந்தார். தன் தந்தையிடமே, அப்பா... நான் எப்படி கண்ணனை சென்றடைவது, எனக்கு ஏதாவது வழி சொல்லிக் கொடுங்கள் என்று ஆவலாய்க் கேட்டார் அதற்கு பெரியாழ்வார் தன்னுடைய ஆசை மகளின் விருப்பத்தை நிறைவேற்ற ஒரு வழி கூறினார்.




பிருந்தாவனத்தில் கோபியர்கள் எல்லாம் கண்ணனையே சென்று அடைய வேண்டும் என்ற விருப்பத்தால் கார்த்தியாயினி விரதம் அல்லது பாவை நோன்பு இருந்து கண்ணனை சென்றடைந்தார்கள். அதுபோல நீயும் பாவை நோன்பு இருந்தால் கண்ணனை சென்றடையலாம் என்று வழி காட்டினார். உடனே மகிழ்ச்சி அடைந்த கோதை ஆண்டாள் கண்ணனுக்குப் பிடித்த மார்கழி மாதத்தின் 30 நாளும் கண்ணனையே நினைத்து பாவை நோன்பிருந்தார். ஒவ்வொரு நாளும் மார்கழி மாதத்தின் அதிகாலையில், பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து நீராடி தன்னுடைய தோழிகள் அனைவரையும் அழைத்துக் கொண்டு பெருமாள் கோவிலுக்குப் போய் கண்ணனை தரிசனம் செய்தார். தான் மட்டும் செல்லாமல் தன் தோழிகளுக்கும் இந்த பலன் கிடைக்க வேண்டும் என்று எல்லா தோழிகளையும் தன்னுடன் அழைத்துச் சென்றார். இப்படி மார்கழி மாதத்தின் 30 நாட்களும் கண்ணனையே நினைத்துப் பாடிய 30 பாசுரங்களின் தொகுப்பு ஆண்டாள் பாடிய திருப்பாவை. சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாள் பாடிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி, திருவாடிப்பூரத்தில் ஜகத்துதித்த கோதையின் திருமணக் கனவு, திருமணம் அனைத்தையும் பற்றி அடுத்த அடுத்த இதழில் பார்க்கலாம்.

– தொடரும்

கட்டுரையாசிரியரின், Kadhai Surabi YouTube தளத்தில் (https://www.youtube.com/@kadhaisurabi3378) ஆண்டாள் சரித்திரம் பற்றி விவரமாகக் காணலாம்.

# நகைச்சுவை மன்னன்

## சார்லி சாப்ளின் கூறிய 25 தத்துவங்கள்...

★ இந்த உலகில் எதுவும் நிரந்தரமில்லை,
உங்கள் பிரச்சினைகள் உட்பட.

★ சிரிக்கத் தவறும் ஒவ்வொரு நாளும் பயனற்றது.

★ சிரிப்புதான் வலிக்கு மருந்து!
சிரிப்புதான் வலிக்கு நிவாரணம், சிரிப்புதான்
உன் வலியை தீர்த்துவைக்கும்.

★ கனவுகள் எல்லாம் நனவாகும்.
நிறைய காயங்களுக்குப் பிறகு.

★ உன் மனம் வலிக்கும் போது சிரி.
பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை...!

★ இதயம் வலித்தாலும் சிரி.
அது உடைந்தாலும் சிரி.

★ என் வலி சிலருக்கு சிரிப்பைத் தரலாம். ஆனால்,
நிச்சயம் என் சிரிப்பு யாருக்கும் வலியைத் தராது.

★ எனக்கு நிறைய பிரச்சினைகள் உண்டு,
ஆனால் என் உதட்டுக்கு அதெல்லாம் தெரியாது.
அது சிரித்துக்கொண்டுதான் இருக்கும்.



★ பணம் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கலாம். ஆனால் வறுமை நம்மிடம் இருந்து பறித்த சிலவற்றை பணத்தால் திருப்பி தர முடியாது.

★ கண்ணாடி என் நண்பன் ஏனென்றால், நான் அழும்போது அது சிரிப்பதில்லை.

★ ஆசைப்படுவதை மறந்து விடு. ஆனால், ஆசைப்பட்டதை மறந்து விடாதே.

★ உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.

★ போலிக்கு தான் பரிசும் பாராட்டும். உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே.

★ எப்போதும் மழையில் நனைந்தபடியே நடக்கப் பிடிக்கிறது. என் கண்களில் கண்ணீரை யாரும் பார்க்க முடியாது என்பதால்.

★ நீ எப்போதும் வானவில்லைக் காண முடியாது உன் பார்வை கீழ் நோக்கியே இருந்தால்!

★ நண்பர்களின் சிரிப்பைப் பார்க்கும் போது கண்ணீரை மறக்கிறேன், நண்பர்களின் கண்ணீரைப் பார்க்கும்போது சிரிப்பை மறக்கிறேன்.

★ வாழ்க்கை அர்த்தம் தேடிக் கொண்டிருப்பதற்கல்ல, அனுபவிப்பதற்கு.



★ நீ மகிழ்ச்சியாய் இல்லாத போது வாழ்க்கை உன்னைப் பார்த்து சிரிக்கிறது. நீ மகிழ்ச்சியாய் இருக்கும் போது உன்னைப் பார்த்து புன்னகை செய்கிறது. ஆனால், நீ அடுத்தவரை மகிழ்ச்சிப்படுத்தும்போது வாழ்க்கை உன்னை வணங்குகிறது.

★ உங்களை தனியாக விட்டாலே போதும்... வாழ்க்கை அழகானதாகத்தான் இருக்கும்.

★ புன்னகைத்துப் பாருங்கள்... வாழ்க்கை அர்த்த முள்ளதாகும்!

★ விவாதங்கள், மோதல்கள் அல்லது பிரச்சினைகளைக் கண்டு அஞ்சத் தேவையில்லை. வானமே இடிந்தாலும் அதிலிருந்து புதிய உலகம் பிறக்கும். வாழ்க்கை இப்படித்தான்.

★ ஒரு முறையாவது உங்களைப் பற்றி முழுமையாகச் சிந்தித்துப் பாருங்கள். வாழ்க்கையின் மிகச்சிறந்த நகைச்சுவையைத் தவறவிட்டுவிடுவீர்கள்.

★ நண்பனுக்கு உதவுவது சுலபமானதுதான். ஆனால், உங்கள் நேரத்தை அவனுக்காக கொடுக்கும் வாய்ப்பு மிகவும் அரிதானது.

★ அதிகமா சிந்திக்கிறோம். மிகக் குறைவாகவே உணர்கிறோம்.

★ கெடுதல் செய்யத்தான் அதிகாரம் தேவைப்படும். மற்றபடி அன்பிருந்தால் எதையும் சாதிக்கலாம்.



வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# ஐ பி ஓ செய்திகள்

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) எழுதும் இந்தப் பகுதியில் ஐ பி ஓ வெளியீடு / குறித்த செய்திகளை அறியலாம்.




– கார்த்திக் முத்தப்பன்
நகரத்தார் கேப்பிட்டல்

## பட்டியலிடப்படாத பங்குகளின் வகைகள்

1. முன்–ஐபிஓ பங்குகள்(Pre–IPO Shares)
2. பணியாளர் பங்கு உரிமைத் திட்டப் பங்குகள்(ESOPs Shares)
3. பட்டியலிடப்பட்ட பங்குகள்(Delisted Shares)

முன்–ஐபிஓ பங்குகள் பற்றி பார்க்கலாம்




## முன்–ஐபிஓ பங்குகள் என்றால் என்ன? (Pre–IPO Shares) இது பட்டியலிடப்படாத பங்குகளிலிருந்து வேறுபட்டதா?

முன்–ஐபிஓ பங்குகள் என்பது ஒரு நிறுவனம் இந்தியாவின் பங்குச் சந்தையில் பட்டியலிடுவதற்கு ஆரம்ப பொதுப் பங்களிப்பில் கையொப்பமிடுவதற்கு முன்பு வழங்கிய பங்குகள் ஆகும்.

முன்–ஐபிஓ நிறுவனங்கள் பெரும்பாலும் இளம் வயதினராகவும், வளர்ந்து வரும் நிலையில் உள்ளன, அவை பங்குச் சந்தையின் கீழ் பட்டியலிடப்படுவதற்கு, அவை சந்தை மூலதனம், நிறுவனத்தின் அளவு, பட்டியல் கட்டணம் போன்ற சில வழிகாட்டுதல்கள் மற்றும் தகுதித் தேவைகளுக்கு இணங்க வேண்டும்.

முன் ஐபிஓ நிறுவனங்கள் எதிர்காலத்தில் பொதுவில் செல்ல திட்டமிடும் நிறுவனங்கள் அல்லது இறுதியில் பொதுவில் செல்லும் ஆனால் நேரம் எடுக்கும். முதலீட்டாளர்கள் முன் ஐபிஓ நிறுவனங்களிடமிருந்து பங்குகளை வாங்குவதற்கு முக்கியக் காரணம் எதிர்பார்த்த லாபம்தான்.

முதலீட்டாளர்கள் தங்கள் பங்குகளை குறைந்த அல்லது தள்ளுபடி விலையில் முதலீட்டாளர்களுக்கு விற்பதால், முன்– ஐபிஓ நிறுவனங்களிடமிருந்து பங்குகளை வாங்க முனைகின்றனர்.

இந்த நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டால், முதலீட்டாளர்கள் அதிலிருந்து குறிப்பிடத்தக்க லாபத்தைப் பெறுகிறார்கள்.

முன்–ஐபிஓ பங்குகள் இரண்டாம் நிலை விற்பனையில் கிடைக்கும் தனியார் ஈக்விட்டி பங்குகள். எனவே, இது நிறுவனத்தில் நேரடி முதலீடு அல்ல.

முன்– ஐபிஓக்கள் பெரும்பாலும் ஐபிஓவிற்கான டிஆர்எச்பி (டிராஃப்ட் ரெட் ஹெர்ரிங் ப்ராஸ்பெக்டஸ்) ஆவணங்களை தாக்கல் செய்த நிறுவனங்கள் அல்லது பங்குச் சந்தையில் இதுவரை பட்டியலிடப்படாத நிறுவனங்களாகும். தொழில்நுட்ப ரீதியாக, பட்டியலிடப்படாத மற்றும் முன்–ஐபிஓ பங்குகள் ஒரே மாதிரியானவை.




சந்தையில் பல்வேறு வகையான பங்குகள் உள்ளன, அவை வெவ்வேறு கட்டங்களாக பிரிக்கப்படுகின்றன:

முன்–ஐபிஓ: ஒரு நிறுவனம் புதிதாக உருவாக்கப்பட்டு அதன் பங்குகள் வெளியிடப்படும் போது.

பட்டியலிடப்பட்ட பங்குகள்: ஆரம்ப பொது வழங்கல் (ஐபிஓ) மூலம் பொதுமக்களிடமிருந்து நேரடியாக நிதி திரட்டும் அளவுக்கு நிறுவனம் நிறுவப்பட்டால்.

நிறுத்தப்பட்ட வர்த்தகம்: முதலீட்டாளர்களின் ஆர்வமின்மை காரணமாக ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகள் செயலிழந்தால்.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

பட்டியலிடப்பட்டது: ஒரு நிறுவனம் தொடர்ந்து கடுமையான இழப்பைச் சந்திக்கும் போது, அது பரிவர்த்தனையிலிருந்து தன்னைப் பட்டியலிட்டால் பட்டியலிடப்பட்ட கட்டணத்திற்கான அதிக செலவைக் குறைக்கிறது.

பணப்புழக்கம்: ஒரு நிறுவனம் திவாலாகிவிட்டால், அது உரிமை கோருபவர்களுக்கு அதன் சொத்துக்களை விநியோகிக்கத் தொடங்குகிறது. இது அடிப்படையில் ஒரு நிறுவனத்தின் பணிநிறுத்தம் கட்டமாகும்.

## ஐபிஓவிற்கு முந்தைய பங்குகள் எங்கே வர்த்தகம் செய்யப்படுகின்றன?

முன் ஐபிஓ பங்குகள், பட்டியலிடப்பட்ட பங்குகளைப் போலன்றி, பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்ய முடியாது.

அப்படியானால், எழும் கேள்வி என்னவென்றால், இந்த பங்குகள் எங்கு வர்த்தகம் செய்யப்படுகின்றன? இந்த பங்குகள் ஓவர்–தி–கவுண்டர் சந்தையில் வர்த்தகம் செய்யப்படுகின்றன, இதனால் அவை ஓவர்– தி– கவுண்டர் பத்திரங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

## ஐபிஓவிற்கு முந்தைய பங்குகள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றன?

ஐபிஓவுக்கு முந்தைய பங்குகள் பங்குச் சந்தையின் கீழ் வராததால், அவற்றின் மீது உண்மையான விலை நிர்ணயிக்கப்படவில்லை. இந்த பங்குகளின் விலைகளை மதிப்பிடுவதற்கு பல்வேறு வழிகள் உள்ளன, ஏனெனில் அனைத்து பங்குகளின் மதிப்பீட்டிற்கும் எந்த குறிப்பிட்ட முறையும் பொருந்தாது.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

## ஐபிஓவிற்கு முந்தைய பங்குகளின் விலைகள் மதிப்பிடப்படும் சில முறைகள் இங்கே:

- **புத்தக மதிப்பு முறை**

இந்த முறையின் கீழ், நிறுவனத்தின் உறுதியான சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆண்டுதோறும் மறுமதிப்பீடு செய்யப்படுகிறதா மற்றும் நியாயமானதா என்பதை சரிபார்க்க வேண்டியது அவசியம்.

Book Value=Sum of all tangible assets – Sum of all tangible liabilities.

- **கடைசி பரிவர்த்தனை விலை முறை**

இந்த முறையில், பெயர் குறிப்பிடுவது போல, ஐபிஓவுக்கு முந்தைய பங்கு வர்த்தகம் செய்யப்பட்ட கடைசி விலை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது. பொதுவாக, இந்த முறை பயன்படுத்தப்படுவதில்லை, ஏனெனில் முந்தைய வர்த்தகம் நடந்த விலை தற்போதைய வர்த்தகத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டிய அவசியமில்லை, பங்குகளின் விலைகள் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ மதிப்பிடப்படலாம்.

- **வருவாய் விகிதத்திற்கான விலை அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட பணப்புழக்க முறை**

இது மிகவும் பயன்படுத்தப்படும் முறைகளில் ஒன்றாகும், ஆனால் நிலையான வணிக செயல்பாடுகளைக் கொண்ட நிறுவனங்களுக்கு மட்டுமே இது பொருந்தும், ஏனெனில் சமீபத்திய வருவாய் எதிர்கால பணப்புழக்கத்தை எதிர்பார்க்கிறது. அது கணிக்கப்பட்டதும், இந்த எதிர்கால பணப்புழக்கங்களை தள்ளுபடி விகிதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

- **நிகர சொத்து மதிப்பு (NAV)**

நிகர சொத்து மதிப்பு புத்தக மதிப்பு முறையைப் போன்றது ஒரே வித்தியாசம் என்னவென்றால், பங்குச் சந்தையில் தற்போதைய விலையின் அடிப்படையில் நிகர சொத்து மதிப்பு கணக்கிடப்படுகிறது, அதேசமயம் புத்தக மதிப்பு முந்தைய விலைகளைப் பயன்படுத்துகிறது.

நிகர சொத்து மதிப்பை இரண்டு முறைகளைப் பயன்படுத்தி மதிப்பிடலாம்:

– உறுதியான சொத்துக்கள் மட்டும் அடங்கும்
NAV=Sum of all tangible assets with current market value – Sum of all tangible liabilities with current market value.

–உறுதியான & அருவமான சொத்துக்கள் இரண்டும் உட்பட
NAV=Sum of all tangible & intangible assets with current market value – Sum of all tangible & intangible liabilities with current market value.

## முன்–ஐபிஓ பங்குகள்: மனதில் எழும் கேள்விகள்?

### ஐபிஓவிற்கு முந்தைய பங்குகளில் முதலீடு செய்வது ஏன் சிறந்தது?

எந்தவொரு ஐபிஓவும் திறந்த சந்தையில் பட்டியலிடப்படுவதால், பல விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன, இது ஒதுக்கீடு வாய்ப்புகளை குறைக்கிறது, ஆனால் நீங்கள் ஏற்கனவே ஐபிஓவுக்கு முந்தைய பங்குகளை வாங்கியிருந்தால், ஒதுக்கீடு பகுதியைத் தவிர்க்கலாம் மற்றும் அவர்களிடமிருந்து பெரும் வருமானத்தை எதிர்பார்க்கலாம்.

**மஜிபிஓவிற்கு முந்தைய பங்குகளில் வர்த்தகம் செய்வதற்கு என்ன வரி விகிதம் பொருந்தும்?**

பட்டியலிடப்படாத பங்குகளை நீங்கள் வைத்திருக்கும் காலம் 24 மாதங்களுக்கும் மேலாக இருந்தால், இந்தப் பங்குகளை விற்கும் போது, LTCG வரி விகிதத்தில் 10% வசூலிக்கப்படும்.

**எனது முன்–ஐபிஓ பங்குகளை சந்தையில் பட்டியலிடுவதற்கு முன் விற்கலாமா?**

ஐபிஓவுக்கு முந்தைய பங்குகளுக்கு ஆறு மாத லாக்–இன் காலம் இருப்பதால், ஐபிஓ பட்டியலிட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் இந்தப் பங்குகளை விற்க முடியும்.

**ஐபிஓவிற்கு முந்தைய நிறுவனங்களில் நான் ஏன் வர்த்தகம் செய்ய வேண்டும்?**

முன்–ஐபிஓ நிறுவனங்கள், வளர்ந்து வரும் நிலையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் எதிர்காலத்தில் பொதுவில் செல்ல திட்டமிட்டுள்ளன. ஐபிஓவுக்கு முந்தைய நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கான முக்கிய காரணம், நிறுவனம் பொதுவில் சென்றவுடன் ஒருவர் பெறும் பெருகிவரும் லாபமாகும். ஐபிஓவுக்கு முந்தைய நிலையில் உள்ள நிறுவனங்களின் பங்கு விலைகள் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதாலும், பட்டியலிடப்பட்ட பிறகு ஒரு நிறுவனத்தின் பங்குகளைப் பெறுவது கடினம் என்பதாலும் மக்கள் ஐபிஓவுக்கு முந்தைய பங்குகளில் முதலீடு செய்கிறார்கள்.

**முன் ஐபிஓ நிறுவனங்களில் முதலீடு செய்தால் நிச்சயம் லாபம் கிடைக்குமா?**

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

எதுவும் உறுதியாக இல்லை, அதே விதி இங்கேயும் பொருந்தும். ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்கு நிறுவனம் பொதுவில் சென்றவுடன் உங்களுக்கு லாபத்தை நிச்சயம் பெற்றுத் தரும் என்ற உறுதியை யாராலும் ஒருவருக்கு வழங்க முடியாது. பங்குச் சந்தைகளில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கும் இதே விதி பொருந்தும்.

### ஒரு நிறுவனம் திட்டமிட்டு பொதுவில் செல்ல வேண்டாம் என முடிவு செய்தால் எனது பங்குகளுக்கு என்ன நடக்கும்?

உங்கள் பங்குகள் எதுவாக இருந்தாலும் பாதுகாப்பாக இருக்கும், நீங்கள் விரும்பினால் பங்குகளை விற்க முடிவு செய்யலாம் அல்லது அவற்றை உங்களுடன் வைத்திருக்கலாம் மற்றும் நீங்கள் லாபத்தைப் பெறுவதற்கு முன் பங்குக்கான சிறந்த சந்தை விலைக்காக காத்திருக்கலாம். நிறுவனம் பிற்காலத்தில் பொதுவில் செல்ல முடிவு செய்திருக்கலாம்.

### பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# நெல்லிக்கனி அள்ளித் தரும் ஆரோக்கியங்கள்!



இயற்கையோடு ஒன்றிவாழ்ந்த நம் தமிழ் முன்னோர்கள் உணவு முதல் மருந்து வரை இயற்கையின் வளங்களை பயன்படுத்தி வந்தனர்.அதனால் அவர்களின் ஆயுட்காலமும் 100 க்கும் அதிகமாக இருந்தது. இன்றைய சூழ்நிலையில் மனிதன் நவீனம் என்ற பெயரில் உடல்பருமன், சிறுவயதிலே கண் குறைப்பாடு, இளநரை, சொத்தைப்பல், நீரிழிவு நோய் என நோய்களை விலைகொடுத்து வாங்கிவிட்டான்.

இன்று ஒருவர் 100 வயதை அடைந்தாலே விழா கொண்டாடும் அவலம் நம்மிடையே வந்துவிட்டது. காரணம், நமது ஆரோக்கிய மற்ற உணவுப்பொருட்களை வெறும் ருசிக்காக சாப்பிட்டு தீய கொழுப்புகளை மட்டும் சேர்த்து உடலினை பராமரிக்க மறந்து விட்டோம்.

நம் முன்னோர்கள் உணவை மருந்தாக பயன்படுத்தினர். ஆனால் நாம் மருந்தைத்தான் உணவாக பயன்படுத்துகிறோம். இந்த நிலையை முழுமையாக மாற்ற தற்போது இயலவில்லை என்றாலும் அதற்கான முயற்சியை செய்தால் தான் நம் அடுத்த தலைமுறை ஆரோக்கியமானதாக அமையும்.அதற்கு என்ன செய்ய வேண்டும்?



நாம் மறந்து போன, மறைந்து போன நமது ஆரோக்கியமான பாரம்பரிய பண்டங்களை, உணவுகளை மீண்டும் அறிந்து பயன் பாட்டிற்கு கொண்டு வரவேண்டும். அந்த வகையில் நம் தமிழர்கள் பயன்படுத்திய உணவு மருந்துகளில் ஒன்று "நெல்லிக்காய்"

நெல்லிக்காய்க்கும், தமிழர்களுக்கும் இடையே உள்ள தொடர்பை பலவழிகளில் அறியலாம். சங்ககால செய்யுள்களில் நெல்லிக்காயை பற்றி சொல்லாத இடங்களே இல்லை. அந்த அளவிற்கு நெல்லிக்காயின் பயன்கள் அளவில்லாதது.

## தமிழ் இலக்கியத்தில் இடம்



கடையெழு வள்ளல்களில் ஒருவரான குறுநில மன்னரான அதியமானுக்கு, தனக்கு கிடைத்த சாகா வரம் தரும் நெல்லிக் கனியை, ஔவையார் பரிசிலாகத் தந்து "கோன் உயர குடி உயரும்" என்ற தத்துவத்திற்கு வித்திட்டார். அதியமான், அந்நெல்லிக்கனியைத் தான் உண்பதை விட, ஔவையார் உட்கொண்டால் தமிழுக்கு மிக்க பயன் விளையும் என்று அவருக்கு கொடுத்ததாக இலக்கியத்தில் உள்ளது.

## வளரியல்பு :

நெல்லி (Phyllanthus emblica) யுபோர்பியேசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு தாவரம். நெல்லிக்கனி... இயற்கை அன்னை மனிதனுக்கு அளித்த வரப்பிரசாதம். இதனைப் பல நூற்றாண்டுகளாக ஆயுர்வேத, யுனானி மருத்துவங்களில் பெரிதளவில் பயன்படுத்தி வருகிறார்கள்.

நெல்லி உயரமான இலையுதிர் மரம். இதன் காய்கள் சதைப் பற்றுடனும், உருண்டையாக ஆறு பிரிவாகப் பிரிந்தும், வெளிரிய பசுமை நிறத்திலோ, மஞ்சளாகவோ காணப்படும்.

நெல்லியில் கருநெல்லி, அருநெல்லி என்ற வேறு இனங்களும் உண்டு. அரி நெல்லிக்காய் எனப்படுவது நம் வீட்டுத் தோட்டங்களில் பயிரிடப்பட்டு மரமாக வளர்ந்து மிகவும் சுவையுடன் கூடிய நெல்லிக்காய்களைக் கோடைகாலம் முழுவதும் தரக்கூடியது மற்றொன்று தோப்பு அல்லது காட்டு நெல்லிக்காய் எனும் பெரிய அளவிலான பச்சை நெல்லிக்காய்.



மலைகளில் நன்றாக விளையும். மற்றைய நிலங்களில் சுமாராக விளையும். தென்னிந்தியாவில் அதிகமாகக் கிடைக்கும். இலையுதிர் மர வகையைச் சேர்ந்தது. இலைகள் நீண்டிருக்கும். அகலம் குறைவானது. இளம் மஞ்சள் நிறக் காய்களை உடைய மரம். காய் இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு சுவைகள் ஒருங்கே பெற்றது.

**நெல்லிக்காயில் உள்ள சத்துக்கள் :**



100 கிராம் நெல்லிக்காயில் 44 கலோரிகள், 10.18 கிராம் கார்போஹைட்ரேட், 0.88 கிராம் ப்ரோடீன், 0.58 கிராம் கொழுப்பு, 4.3 கிராம் நார்ச்சத்து, 252mg வைட்டமின் சி, 290 IU வைட்டமின் ஏ, 25mg கால்சியம், 0.31mg அயன் மற்றும் 0.20mg பாஸ்பரஸ் ஆகியவற்றை கொண்டுள்ளது.

நெல்லிக்காயில் 5 சுவைகள் இருக்கின்றன. இதில் அறுசுவைகளில் உள்ள உப்பு சுவையை தவிர மற்ற அனைத்து சுவைகளும் நிறைந்தது. ஆயுர்வேத மருத்துவத்தை பொறுத்தவரை சமச்சீரான உணவு என்பது அறுசுவைகள் கொண்டது. நெல்லியின் உப்பு சுவை இல்லாததால் அதை பதப்படுத்தும் போது அதில் உப்பின் சுவையும் கலந்து விடும். இதில் அறுசுவைகள் கலந்து சமச்சீர் உணவாகி விடுகிறது.

அழகு மற்றும் ஆரோக்கியம் குறித்த பல வித பிரச்சனைகளுக்கும் நெல்லிக்காய் அற்புதமான மருந்தாக உள்ளது.

நெல்லிக்காய் பலவித ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது. இதனில் வைட்டமின் – C அதிக அளவில் உள்ளது. ஆரஞ்சு பழங்களை விட, எட்டு மடங்கு வைட்டமின் – C அதிகமுள்ளது. இலவங்கப்பட்டை தூளை விட இரண்டு மடங்கு ஆக்சிஜனேற்ற பண்பு அதிகம் கொண்டது. அதனால் தான் நெல்லிக்காயினை அற்புதமான மருந்து என்று நாம் அழைக்கிறோம். இதனை பரவலாக பல வியாதிகளுக்கும் மருந்தாக பயன்படுத்துகிறோம். நெல்லிக்காயை வழக்கமாக சாப்பிட்டு வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

குளிர் காலத்தில் நம் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும், இதனால் பல விதமான வியாதிகள் நம்மை எளிதில் சூழும். அதனால் தினசரி ஒரு நெல்லிக்காய் உட்கொள்வது சிறந்த தீர்வு.

இதனை குளிர் காலத்தில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் நம்முடைய உடல் ஆரோக்கியம் வருடம் முழுவதும் சிறப்பாக இருக்கும். ஆனால் ஒரு சிலருக்கு இந்த நெல்லிக்கனியின் சுவை பிடிக்காமல் போகிறது, அதனால் இயற்கை நமக்களித்த இந்த வரப்பிரசாதத்தை உண்ணாமல் தவிர்க்கின்றனர்.

நெல்லிக்காயினை பல வழிகளில் நம்மால் பயன்படுத்த முடியும். இதனை பச்சையாகவோ, ஜூஸாகவோ, சட்னியாகவோ, மிட்டாய் ஆகவோ நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். எப்படி எடுத்துக் கொண்டாலும், இதன் பலன்கள் மாறுவதில்லை. இந்த இதழில் நாம் வெறும் வயிற்றில் நெல்லிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் பலன்கள் குறித்து தான் பார்க்கவிருக்கிறோம்.

## நெல்லிக்காய் சாப்பிடுவதால் கிடைக்கும் பலன்கள்:



### முடிக்கும், சருமத்துக்கும் சிறந்தது நெல்லிக்காய்

நெல்லிக்காயை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர, முடி உதிர்தல் குறையும், முடி வளர்ச்சிக்கு உதவும். நெல்லிக்காயில் உள்ள தனித்துவமிக்க பண்பு முடி நரைத்து போவதை தடுக்கும். நெல்லிக்காய் முடி உதிர்வதையும் தடுக்கும். முடியின் வேர்க்கால்களை தூண்டுவதன் மூலமாக முடி வளர்ச்சியும் இதனால் அதிகரிக்கும்.



ஆம், கருவேப்பிலை போலவே முடியின் வளர்ச்சிக்கு நெல்லிக்காயும் உதவுகிறது. இதனில் தேவையான கொழுப்பு அமிலம் உள்ளது. இது முடியின் வேர்க்கால்களில் ஊடுருவி முடி நரைத்து போவதை தடுக்கிறது. மேலும் பொடுகு தொல்லையையும் குறைக்கிறது. முடியின் வேர்க்கால்களை வலுப்படுத்துகிறது.

இந்த சிட்ரஸ் பழத்தில் இரும்புச்சத்தும், கரோட்டினும் அதிகமுள்ளது. இதனால் முடி வளர்ச்சி அதிகரிக்கும். நெல்லிக்காய் இயற்கை கண்டிஷனராக செயல்பட்டு, மிருதுவான, பொலிவான முடியை நீங்கள் பெற உதவுகிறது.

நெல்லிக்காய் வயதான தோற்றத்தை தடுக்க உதவுவதாகும். இதனில் உள்ள வைட்டமின் – C மற்றும் ஆக்சிஜனேற்ற பண்பு சருமத்தில் ஏற்படும் வரிகள் மற்றும் சுருக்கங்களை குறைக்கிறது. நெல்லிக்காய் சாறுடன், தேனை கலந்து தினமும் காலை சாப்பிட்டு வர, ஆரோக்கியமான பளபளக்கும் சருமத்தை உங்களால் பெற முடியும்.

## மலச்சிக்கல் மற்றும் அசிடிட்டி பிரச்சனைக்கு உதவும் நெல்லிக்காய்

வெறும் வயிற்றில் நெல்லிக்காயினை சாப்பிட்டு வர மலச்சிக்கலும், அசிடிட்டியும் குறையும். இது அல்சர் போன்ற பிரச்சனைக்கும் நல்லது. இது உங்களுடைய ஒட்டுமொத்த செரிமான மண்டலத்தையும் சீராக இயங்க வைக்கும். நெல்லிக்காயில் செரிமான மண்டலத்துக்கு ஆதரவளிக்கும் பண்புள்ளது. இதனில் உள்ள நார்ச்சத்து, குடல் அசைவுகளை ஒழுங்குப்படுத்த உதவுகிறது. கூடுதலாக, நெல்லிக்காய் இரைப்பை மற்றும் செரிமான மண்டல சுரப்பிக்கும் உதவுகிறது.

இதனை உண்பதால், நாம் சாப்பிடும் உணவு செரிமானமடைகிறது. மேலும் உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களை உறிஞ்சவும் இது உதவுகிறது.

## மூட்டு அழற்சியை தடுக்கும் நெல்லிக்காய்



நெல்லிக்காயில் ப்ரோ அபோப்டோசிஸ் எனப்படும் பண்புள்ளது. இது கட்டி அல்லது வைரஸ் செல்கள் போன்றவற்றை நீக்க உதவுகிறது. இந்த பண்பினால் மூட்டு அழற்சி போன்றவை தடுக்கப்படுகிறது. மேலும் இது எலும்புகளை வலுவாக்கவும் உதவுகிறது.

இதனை தவிர மூட்டு வீக்கம், மூட்டு வலி, வலியுடன் கூடிய வாய்ப்புண் போன்ற பொதுவான பிரச்சனைகளையும் சரி செய்ய உதவுகிறது. நெல்லிக்காயில் உள்ள அலர்ஜி எதிர்ப்பு பண்பு, அனைத்து விதமான வலிகளையும் போக்க பயன்படுகிறது.

## கண்களில் சர்க்கரை வியாதி வருவதை குறைக்கும் நெல்லிக்காய்

சர்க்கரை வியாதிக்காக ஆயுர்வேதத்தில் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக நெல்லிக்காய் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நெல்லிக்காயில் பீட்டா குளுக்கோளின் உள்ளது. இது AKR1B1 எனப்படும் சர்க்கரை

வியாதியினால் கண் பார்வை குறைபாடு ஏற்படுவதற்கு பொறுப் பேற்கும் என்சைம்களை குறைக்க உதவுகிறது.



நீங்கள் அனைத்து விதமான பயன்களையும் அடைய வேண்டு மெனில், நெல்லிக்காயை தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வரவும். உங்களுக்கு ஏதாவது பிரச்சனை வெகுநாட்களாக இருந்தால், மருத்துவர் ஆலோசனை பெறுவது நல்லது.

**இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது:** நெல்லிக்காய் ஆனது கெட்ட கொழுப்பை (எல்டிஎல்) குறைக்கவும், நல்ல கொழுப்பை (எச்டிஎல்) அதிகரிக்கவும் உதவுகிறது. மேலும், இது இதய ஆரோக்கியத்தை ஆதரிக்கிறது மற்றும் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

**எடை குறைப்பு:** நெல்லிக்காயில் வைட்டமின் சி நிறைந்துள்ளதால் வளர்சிதை மாற்றத்தை அதிகரிக்கிறது மற்றும் கொழுப்பை எரிக்க உதவுகிறது. இதன் நார்ச்சத்து முழுமையான உணர்வை அளிப்பதோடு, பசி உணர்வு மற்றும் கலோரி உட்கொள்ளலைக் குறைக்கிறது. இதன் காரணமாக இது எடை குறைப்புக்கு உதவுகிறது. அதே நேரத்தில் செரிமானத்தை மேம்படுத்தவும், நச்சுத்தன்மையை நீக்கவும் உதவுகிறது.

காலை உணவுகளானது அன்றைய நாள் முழுவதும் நம்மை நன்றாக உணரவைப்பது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், நோய் எதிர்ப்பு சக்தியையும், குடலின் செயல்பாட்டையும் மேம்படுத்துகிறது. அப்படிப்பட்ட நன்மைகளை கொண்ட நெல்லிக்காயை வெறும் வயிற்றில் சாப்பிடுவதால் ஒட்டுமொத்த ஆரோக்கியமும் மேம்படும் என்று கூறப்படுகிறது.

## பொறுப்புத் துறப்பு

இந்தக் கட்டுரையின் மூலம் உங்களுக்கு தகவல்களை வழங்குவது மட்டுமே எங்கள் நோக்கமாகும். எந்தவொரு மருந்தையும், சிகிச்சையையும் நாங்கள் பரிந்துரைக்கவில்லை. ஒரு மருத்துவர் மட்டுமே உங்களுக்கு நல்ல ஆலோசனையை வழங்க முடியும்.



வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# ஜோடிக் கிளிகள்

நின்றாடும் கிளிகள் சிங்காரக் குரலில்
சங்கீதம் இசைத்ததே

கிரீச் கிரீச் சத்தம் சந்தி வேளையில்
சந்தோஷம் தந்ததே

ஒன்றாகக் கூடி உள்ளாடும் உவகை
உல்லாசம் தந்ததே

பறந்தோடும் பறவை உறவாடும் நிறைவு
உற்சாகம் பொங்குதே

அன்புப் பரிமாணமிங்கு அளவளாவும் அழகு
ஆனந்தம் தந்ததே

அசைந்தாடும் கிளையில் இசைந்தாடும் கிளிகள்
இன்பம் பரப்புதே

தவழ்ந்தாடும் தென்றலில் கலந்தாடும் கிளிகள்
கலவிக் கலந்ததே

பிணக்கம் இன்றி இணைந்தாடும் கிளிகள்
இன்னல் களைந்ததே





–அரு.சிவகாமி இராமனாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

சிட்டான கிளிகள் பட்டான மொழியில்
பண்பாடு பகர்ந்ததே

படிப்புப் பட்டயங்கள் சொல்லித் தராத
பெருஞ்செய்தி செப்புதே

கோடானு கோடி செல்வங்கள் தாரா
சங்கதிகள் சிந்துதே

பாசங்கு இன்றி பரிவோடு வாழும்
பண்புநிலை நன்று

ஆசானைப் போல அறிவுறுத்தும் கிளிகள்
மொழிந்தது நன்கு

விழிகளில் வசந்தம் வழிந்ததே
வாழ்வின் அர்த்தம் விளங்குதே

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்




# பிள்ளையார் நோன்பு பலகாரங்கள்

நகரத்தார்களுக்கே உரிய முக்கிய விழாக்களில் மிகுந்த தொன்மையும் பெருமையும் உடைய விழாவாக கடைப்பிடிக்கப்படும் பிள்ளையார் நோன்பு வரும் ஜனவரி மாதம் 04.01.2025 சனிக்கிழமை அன்று வருகிறது . தமிழ்நாட்டில் மட்டுமில்லாமல், அனைத்து நாடுகளிலும் வசிக்கும் நகரத்தார் பெருமக்களால் இந்த "பிள்ளையார் நோன்பு" தவறாமல் கடைப்பிடிக்கப் படுகிறது. பண்டிகை என்றால் பலகாரங்கள் இல்லாமலா? . இறைவழிபாட்டில் இனிப்பு பலகாரங்கள் முக்கிய இடத்தை வகுக்கின்றன. அந்த வகையில் பிள்ளையார் நோன்பில் கருப்பட்டி பணியாரம், கந்தரப்பம், திரட்டுப்பால் ஆகியன முதன்மை பெறுகின்றன. செட்டிநாட்டு சமையல் என்றாலே அதற்கென்று தனி முத்திரை தனி ருசி ! ஆச்சிகள் அனைவருக்கும் நம் பாரம்பரிய பலகாரங்கள் அத்துப்படி. இருந்தாலும் இன்றைய தலைமுறையினரும் நம் பாரம்பரிய பலகாரங்கள் பற்றி அறிவது தொடரும் நம் பாரம்பரிய பரிணாமத்திற்கு உதவும்.

சுவீட் எடு கொண்டாடு.. ஆம் இந்த இதழில் பிள்ளையார் நோன்பு இனிப்பு பலகாரங்கள் செய்முறை பற்றி பார்ப்போம்.



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

## கருப்பட்டி பணியாரம் :



பிள்ளையார் நோன்பில் முக்கியமாக இடம் பெறுவது கருப்பட்டி பணியாரம். கருப்பட்டி பணியாரம் செய்வது எப்படி என்று முதலில் பார்ப்போம்.

## தேவையான பொருட்கள் :

பச்சரிசி – 1 கிலோகிராம்
கருப்பட்டி – ½ கிலோகிராம்
ஏலக்காய் – 5 எண்ணம்
எண்ணெய் – பொரித்தெடுக்கத் தேவையான அளவு

## செய்முறை :

முதலில் பச்சரிசியை முப்பது நிமிடம் நேரம் ஊற வைக்கவும். பின் தண்ணீரை வடித்து காய்ந்த துணியில் அரிசியை பரப்பி உலர விடவும். இடிக்கும் பதத்தில் அரிசியை எடுத்து மிசினில் கொடுத்து நைசாக இடித்துக் கொள்ளவும். பின் சலிப்பானில் இட்டு சலித்துக் கொள்ளவும்.

கருப்பட்டியை ஒன்றிரண்டாத் தட்டிக் கொள்ளவும். பாத்திரத்தில் ஒன்றிரண்டாக தட்டிய கருப்பட்டியைப் போட்டு சிறிதளவு தண்ணீர் ஊற்றி அடுப்பில் சிம்மில் வைக்கவும். கருப்பட்டி முழுவதும் கரைந்து கரைசலானவுடன் உடன் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். பின் அதனை வடிகட்டிக் கொள்ளவும்.

கருப்பட்டிக் கரைசலை சிறிது சிறிதாக இடித்து சலித்த அரிசி மாவில் சேர்த்துக் கிளறவும். தேவையான அளவு தண்ணீர் சேர்த்து மாவை இட்லி மாவுப் பதத்தில் தயார் செய்யவும். ஏலக்காயை ஒன்றிரண்டாக தட்டி மாவுடன் சேர்க்கவும். இதுவே பணியாரம் சுடுவதற்கு ஏற்ற பதமாகும்.

வாணலியை அடுப்பில் வைத்து பொரித்தெடுக்கத் தேவையான அளவு எண்ணெய் ஊற்றவும். எண்ணெய் காய்ந்ததும் ஒரு குழிக்கரண்டி மாவினை எடுத்து ஊற்றவும். ஒரு புறம் வெந்ததும் திருப்பிப் போட்டவும். பிரவுன் கலர் வந்ததும் எடுத்து விடவும். சுவையான கருப்பட்டி பணியாரம் தயார். இதை காற்றுப்புகாத டப்பாவில் அடைத்துக் கொள்ளவும். இதனை இரு வாரங்கள் வரை உபயோகிக்கலாம்.

**கந்தரப்பம் :**



பிள்ளையார் நோன்பு பலகாரங்களில் அடுத்து இடம் பெறுவது கந்தரப்பம். செட்டிநாட்டு பலகார வகைகளில் நிறையப்பேர் விரும்புவதும், முக்கியமானதும் செட்டி மகன் செல்லப்பிள்ளை கந்தனுக்கு பிடித்தமானதுமான கந்தரப்பம். வாருங்கள் இதன் செய்முறையை காண்போம்.

## தேவையானவை :



500 கிராம் பச்சரிசி (2 ½ கப்)
100 கிராம் உளுத்தம் பருப்பு (½ கப்)
400 கிராம் வெல்லம் (2 கப்)
தேங்காய் பூ 2 மேஜைக்கரண்டி
1 தேக்கரண்டி வெந்தயம்
ஏலக்காய் 10.

அரிசி, உளுந்தம் பருப்பு, வெந்தயம் ஆகியவற்றை ஒன்றாக ஊற வைத்து பிறகு தண்ணீர்சிறிதளவு ஊற்றி அரைக்க வேண்டும். பாதி அரைத்ததும் தட்டி வைத்துள்ள வெல்லத்தை அத்துடன் சேர்த்து நன்கு மிருதுவாக அரைபட்ட பின் அத்துடன் தேங்காய்பூ சேர்த்து மேலும் 2–3 நிமிடங்கள் அரைத்து பின் அரைத்த மாவை பாத்திரத்தில் எடுத்து அத்துடன் ஏலக்காயை பொடி செய்து மாவில் போட்டு நன்கு கலந்து, அடியில் தட்டையான(flat bottom) வாணலியை அடுப்பில் வைத்து எண்ணையை ஊற்றி காய்ந்ததும் அரைத்து வைத்துள்ள மாவை வட்டமான கரண்டியில் எடுத்து எண்ணைக்குள் ஊற்றி அப்பம் மேலெழும்பி வந்ததும், அதை திருப்பி விட்டு வெந்ததும் எடுக்கவும்.

## குறிப்புகள் :

1) அரிசி பருப்பு முப்பது அல்லது நாற்பது நிமிடங்கள் ஊறினால் போதுமானது.

2) வெல்லத்தை முன் கூட்டியே தட்டி பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

3) மாவு அரைக்கும் போது தண்ணீரை சிறிது சிறிதாக ஊற்றி அரைக்க வேண்டும்.

தண்ணீர் கூடி விட்டால் வெல்லம் போட்டதும் இன்னும் அதிகம் இளகி மாவு தண்ணியாகி விடும்.

4) எண்ணை அதிகம் சூடாக இருந்தால் பணியாரம் (அப்பம்) சீக்கிரம் வெந்து உள்ளே வேகாமல் மாவாக இருக்கும். அதே சமயம் சூடு குறைந்தாலும் எண்ணையை குடித்து விடும் ஆதலால் சரியான அளவில் நெருப்பை குறைத்து வைத்து பணியாரம் சுட வேண்டும். இது எல்லாவித எண்ணை பலகாரத்திற்கும் பொருந்தும்.

5) மாவை அரைத்தவுடனும் கந்தரப்பம் சுடலாம். சிறிது புளிக்க வைத்தும் சுடலாம் (ருசி குழிப்பணியாரம் போல் இருக்கும்).

6) தேங்காய்ப்பூவை (சேர்த்து) அரைக்காமல் மாவில் நேரடியாக போட்டு கலந்தும்சுடலாம்

7) அதிக இனிப்பு விரும்பாதவர்கள் வெல்ல அளவை குறைத்து கொள்ளலாம்.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

## திரட்டுப்பால்



அடுத்து பிள்ளையார் நோன்பில் இடம்பெறும் இனிப்பு வகை திரட்டுப்பால். இதன் செய்முறை

### தேவையான பொருட்கள்:

பால்–1 லிட்டர்

கருப்பட்டி அல்லது வெல்லம் பொடித்து 1 மேஜைக்கரண்டி

### செய்முறை :

1. பாலை காய்ச்சி பொங்கி வரும்போது மிதமான தீயில் சுண்டக்காய்ச்சவும்.
2. நான்கில் ஒரு பங்காக சுண்டியதும் பொடித்த வெல்லம் அல்லது கருப்பட்டி சேர்த்து பால்கோவா பதம் வரும் வரை கிண்டிக்கொண்டே இருக்கவும்.
3. நன்றாக திரண்டு வந்ததும் கிண்ணத்தில் நெய்த்தடவி அதில் மாற்றி பயன்படுத்தவும் .திரட்டுப்பால் ரெடி

கட்டுரையாக்கம்:

உமாராணி சொக்கலிங்கம்.
நற்சாந்துபட்டி ஈரோடு.



வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு நிறுவனம் குறித்த பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

Prakash | Pipes Limited

இந்நிறுவனத்தைப் பற்றி:

PRAKASH PIPES LIMITED (542684/PPL)

பிரகாஷ் பைப்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் Promoter, ஸ்ரீ வேத் பிரகாஷ் அகர்வால், ககூஅக ஆம் ஆண்டு முதல் பிவிசி பைப்புகள் மற்றும் ஃபிட்டிங்குகளை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார். பல ஆண்டுகளாக, பிரகாஷ் பிவிசி பைப்புகள் மற்றும்

பிட்டிங்குகளுக்கான நம்பகமான பிராண்டாக சந்தையில் உருவெடுத்துள்ளார். தரத்தில் அதிகபட்ச கவனம் செலுத்திவருகிறது.

பிரகாஷ் பைப்ஸ் லிமிடெட் வட இந்தியாவில் PVC குழாய்கள் மற்றும் பொருத்துதல்களை உற்பத்தி செய்யும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் நெகிழ்வான பேக்கேஜிங் நிறுவனங்களில் ஒன்று.

நிறுவனம் Agri Pipes, Column Pipes, Plumbing Pipes, Casing Pipes, SWR Pipes, Garden Pipes and their related Fittings. போன்ற பரந்த அளவிலான தயாரிப்புகளை உற்பத்தி செய்கிறது. நிறுவனத்தின் தயாரிப்புகள் நீர்ப்பாசனம், வடிகால், வீட்டுவசதி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் பயன்பாட்டைக் காண்கின்றன. உத்தரகண்ட் மாநிலம் காஷிபூரில் உள்ள நிறுவனத்தின் ஆலை, 60 ஏக்கர் நிலப்பரப்பில் பரவியுள்ளது, 50%க்கும் அதிகமான பகுதி காடு மற்றும் தோட்டத்திற்காக பயன்படுத்தப்படுகிறது.

நிறுவனம் ISO 22000:2005, ISO 9001:2015 மற்றும் BRC தர நிலைகளுக்கு இணங்க அதி நவீன ஆலைகளுடன் உற்பத்தியில் இறங்கியுள்ளது. உணவு, பானங்கள், எண்ணெய், தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் மருந்துப் பொருட்கள் ஆகியவற்றின் பேக்கேஜிங்கில் பயன்பாட்டைக் கண்டறியும் உயர் செயல்திறன் high performance barrier films and laminates கலை நிறுவனம் தயாரிக்கிறது.

தொழில்துறையின் போக்குகளைக் கருத்தில் கொண்டு, அதன் PVC மற்றும் பிளாஸ்டிக் பிரிவை மேலும் வலுப்படுத்த, பிரகாஷ் பைப்ஸ் தனது வாடிக்கையாளர்களுக்கு முழுமையான தீர்வுகளை வழங்க நெகிழி பேக்கேஜிங்கில் இறங்கியுள்ளது. தின்பண்டங்கள், சோப்புகள், ஷாம்புகள் போன்ற நுகர்வோர் தயாரிப்புகளை பேக்கேஜிங் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் லேமினேட்கள் மற்றும் பைகளை உற்பத்தி செய்வதற்காக ஒரு நெகிழி பேக்கேஜிங் யூனிட் உத்தரகாண்டில் உள்ள காஷிபூரில் தொடங்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் பேக்கேஜிங் குழு செலவு குறைந்த மற்றும் தரமான பேக்கேஜிங் தீர்வுகளை உருவாக்க தீவிரமாக செயல்படுகிறது.

பிரகாஷ் பைப்ஸ் நீர்ப்பாசனம், கழிவுநீர் மற்றும் பிளம்பிங் தொழில் நுட்பங்களில் நிலையான கண்டுபிடிப்புகளுக்கு உறுதி பூண்டுள்ளது. நாட்டின் தொடர்ந்து அதிகரித்து வரும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் புதுமைகள். அக்ரி பைப்புகள் முதல் சுகாதார குழாய்கள் வரை, பிரகாஷ் பைப்பில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு தயாரிப்பும் சர்வதேச மற்றும் இந்திய தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக தரக் கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறதுபிரகாஷ் பைப்ஸ் நீர்ப்பாசனம், கழிவுநீர் மற்றும் பிளம்பிங் தொழில்நுட்பங்களில் நிலையான கண்டுபிடிப்புகளுக்கு உறுதிபூண்டுள்ளது. நாட்டின் தொடர்ந்து அதிகரித்து வரும் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் புதுமைகள். அக்ரி பைப்புகள் முதல் சுகாதார குழாய்கள் வரை, பிரகாஷ் பைப்பில் தயாரிக்கப்படும் ஒவ்வொரு தயாரிப்பும் சர்வதேச மற்றும் இந்திய தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக தரக் கட்டுப்பாட்டு சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது

அக்ரி பைப்புகள் முதல் சுகாதார குழாய்கள் வரை. 39 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ள இந்நிறுவனம், இந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற PVC குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும்.

பிரகாஷ் பைப்ஸ் IS : 4985 – 2000 உடன்பட்டு பரந்த அளவில் உயர்தர UPVC குழாய்கள் மற்றும் பொருத்துதல்களின் மிகப்பெரிய உற்பத்தியாளர்களில் ஒன்றாகும்

பிரகாஷ் plain casing and ribbed screen pipes ஆழமற்ற அல்லது ஆழமான ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து சுத்தமான மற்றும் தெளிவான நீரை உறுதி செய்வதற்காக IS 12818:1002 தர நிலைகளுடன் ஒத்து சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரகாஷ் மழை நீர் குழாய்கள் (Soil Waste Rain) IS 13592:1992 தரநிலைகளுடன் ஒத்து வடிவமைக்கப்பட்டுள்ள இந்த குழாய்கள் வடிகால் அமைப்புகள் மற்றும் சுகாதார நோக்கங்களுக்காக ஏற்றது. இந்த குழாய்கள் அஸ்பெஸ்டோ சிமெண்ட் மற்றும் CI குழாய்களை விட சிறந்தது.

பிரகாஷ் column pipes மேம்பட்ட தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப் படுகின்றன மற்றும் கசிவு தடுப்பு சுயவிவர வளையத்துடன் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த குழாய்கள் மற்ற குழாய்களுடன் ஒப்பிடுகையில் கூடுதல் சுமையை தாங்கும் திறன் கொண்டது.

பிரகாஷ் பைப்ஸ், FMCG, உணவு, பானங்கள், உள்கட்டமைப்பு மற்றும் மருந்து தயாரிப்புகளின் பேக்கேஜிங்கில் பயன்பாட்டைக் கண்டறியும் உயர் செயல்திறன் barrier films and laminates போன்ற

தொழில்நுட்ப ரீதியாக உயர்ந்த மற்றும் நிலையான பேக்கேஜிங் தீர்வுகளை வழங்குகிறது.

FMCG பேக்கேஜிங்கில், இது ஷாம்பு & கண்டிஷனர்கள், மிட்டாய் & தின்பண்டங்கள், சோப்புகள் & சவர்க்காரம், நறுமண எண்ணெய்கள், எண்ணெய்கள், அத்தியாவசிய எண்ணெய்கள், காய்கறி எண்ணெய்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

உள்கட்டமைப்பு பேக்கேஜிங்கில், இது சிமெண்ட்ஸ், பெயிண்ட்கள், பிரிண்டிங் மைகள், பெட்ரோலியம் எண்ணெய்கள், வாகன மற்றும் பொறியியல் கூறுகள், மோட்டார் எண்ணெய்கள் மற்றும் லூப்ரிகண்டுகள், தோட்ட உரங்கள், தாவர ஊட்டச்சத்துக்கள் மற்றும் உரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

பானங்கள் பேக்கேஜிங்கில், இது தேநீர் & காபி, பழச்சாறுகள், செயற்கை சாறுகள் மற்றும் பானங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

உணவு பேக்கேஜிங்கில், இது சிற்றுண்டி, சர்க்கரை, கோதுமை மாவு, அரிசி மற்றும் அனைத்து தானியங்கள், நூடுல்ஸ், மசாலா, பச்சை காய்கறிகள் மற்றும் பழங்கள், கடல் உணவுகள், உறைந்த உணவுகள், சீஸ் மற்றும் பால் பொருட்கள், விலங்குகள் (செல்லப் பிராணிகள்) உணவுகள், சாப்பிட தயார் உணவுகள், இனிப்பு கலவைகள், மரினேட்ஸ் மற்றும் பேஸ்ட்கள், இறைச்சி, மூடுபனி எதிர்ப்பு,

வகுத்துரை, நிலை தாங்கி / எதிர்ப்பு, சறுக்கல் தாங்கி / எதிர்ப்பு, மருந்துகள், கருத்தடைகள், நுண்ணுயிரிகள் & நொதிகள் பேக்கேஜிங் தீர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

## வாடிக்கையாளர்கள்:

நிறுவனம் பல முன்னணி மற்றும் புகழ்பெற்ற வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்கிறது Patanjali, Cream bell, Organic India, Dalmia Bharat Cements, Chittchore Namkeenz, Devarpan Namkeenz & Snacks, Huhtamaki–PPL, Farmer Fresh, Odat, Food Guptaji Park, Akriti, Cornitos, EMS, Nutra foods & beverages, Manforce Condoms, Tastilo Nacho Chips, Madhusudan, Bambino, Mrs Bectors Cremica, Anmol, Priniti, Krbl Ltd, Havells India, BIKAJI மற்றும் பலர்.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

சிறப்புப்பாக்கம் இண்டஸ்ட்ரி PE 42.36 உடன் ஒப்பிடுகையில், ஸ்டாண்டலோன் EPS 41.06 (2024–09 இல் முடிவடையும் பன்னிரெண்டு மாதங்கள்) ஸ்டாண்டலோன் PE 11.89 மற்றும் ரூபாய் 10 முகமதிப்பு கொண்ட நிறுவனம் கடந்த 5 ஆண்டுகளில் 25.8% CAGR இன் நல்ல லாப வளர்ச்சியை வழங்கியுள்ளது

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>12.18 | EPS - TTM (₹)<br>41.06 |
| MCap (₹ Cr.)<br>1,194.36 | Sectoral MCap Rank<br>18 |
| PB Ratio (x)<br>3.31 | Div Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>10.00 | Beta<br>1.10 |
| VWAP (₹)<br>503.02 | 52W H/L (₹)<br>667.95 / 319.80 |

**Prakash Pipes Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↓-1.0% |
| 1 Week | ↑1.93% |
| 1 Month | -3.62% |
| 3 Months | -16.65% |
| 1 Year | 26.98% |
| 3 Years | ↑227.01% |
| 5 Years | ↑577.51% |

Contingent Liabilities Coverage

Company has sufficient cash reserves to pay off its contingent liabilities. (Source: Standalone Financials)

Topline Contraction

Sales de-grew by 6.26%. Company witnessed revenue contraction for the first time in last 3 years. (Source: Standalone Financials)

Stock Returns vs Nifty Smallcap 100

Stock gave a 3 year return of 230.31% as compared to Nifty Smallcap 100 which gave a return of 60.08%. (as of last trading session)

Employee & Interest Expense

Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 5.17% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Standalone Financials)

Prakash Pipes Share Price Update

Prakash Pipes Ltd. share price moved down by -1.00% from its previous close of Rs 505.05. Prakash Pipes Ltd. stock last traded price is 500.00

## நிறுவனத்தின் நிதி நிலை:

Income (P&L) | Balance Sheet | Cash Flow | Ratios — STANDALONE

INSIGHTS

**Topline Contraction**
Sales de-grew by 6.26%. Company witnessed revenue contraction for the first time in last 3 years. (Source: Standalone Financials)

**Employee & Interest Expense**
Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 5.17% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Standalone Financials)

| QUARTERLY \| ANNUAL | SEP 2024 | JUN 2024 | MAR 2024 | DEC 2023 | SEP 2023 |
|---|---|---|---|---|---|
| Total Income | 205.66 | 209.86 | 169.42 | 162.63 | 176.30 |
| Total Income Growth (%) | ↓-2.00 | ↑23.87 | ↑4.18 | ↓-7.75 | ↓-0.25 |
| Total Expenses | 171.42 | 174.37 | 137.06 | 130.80 | 149.16 |
| Total Expenses Growth (%) | ↓-1.69 | ↑27.22 | ↑4.79 | ↓-12.31 | ↓-3.59 |
| EBIT | 34.24 | 35.49 | 32.36 | 31.83 | 27.14 |
| EBIT Growth (%) | ↓-3.52 | ↑9.67 | ↑1.67 | ↑17.28 | ↑23.25 |
| Profit after Tax (PAT) | 24.30 | 25.40 | 25.36 | 23.14 | 22.67 |
| PAT Growth (%) | ↓-4.33 | ↑0.16 | ↑9.59 | ↑2.07 | ↑22.74 |
| EBIT Margin (%) | 16.65 | 16.91 | 19.10 | 19.57 | 15.39 |
| Net Profit Margin (%) | 11.82 | 12.10 | 14.97 | 14.23 | 12.86 |
| Basic EPS (₹) | 10.16 | 10.62 | 10.61 | 9.67 | [illegible] |

Income (P&L) | **Balance Sheet** | Cash Flow | Ratios — STANDALONE

**INSIGHTS**

**Contingent Liabilities Coverage**

Company has sufficient cash reserves to pay off its contingent liabilities. (Source: Standalone Financials)

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 492.53 | 345.53 | 296.54 | 241.48 | 178.77 |
| Total Assets Growth (%) | ↑42.54 | 16.52 | ↑22.80 | 35.08 | 27.21 |
| Total Liabilities | 127.36 | 66.92 | 61.23 | 49.92 | 46.43 |
| Total Liabilities Growth (%) | ↑90.32 | ↑9.29 | ↑22.66 | 7.52 | 48.05 |
| Total Equity | 365.17 | 278.61 | 235.31 | 191.56 | 132.34 |
| Total Equity Growth (%) | ↑31.07 | 18.40 | ↑22.84 | 44.75 | 21.22 |
| Current Ratio (x) | 3.51 | 4.15 | 3.06 | 3.01 | 2.25 |
| Total Debt to Equity (x) | 0.11 | 0.03 | 0.02 | 0.01 | 0.04 |
| Contingent Liabilities | 16.07 | 1.53 | 1.00 | 6.63 | 12.89 |

Income (P&L) | Balance Sheet | **Cash Flow** | Ratios — STANDALONE

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 119.64 | 42.49 | 51.19 | 29.96 | 13.95 |
| Net Cash used in Investing Activities | -45.97 | 15.58 | -35.69 | -32.93 | -15.32 |
| Net Cash flow from Financing Activities | 25.55 | 0.50 | 0.45 | 18.17 | 1.63 |
| Net Cash Flow | 99.22 | 58.57 | 15.95 | 15.20 | 0.26 |
| Closing Cash & Cash Equivalent | 189.91 | 90.69 | 32.12 | 16.17 | 0.97 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | 109.41 | ↑182.35 | ↑98.64 | 1,567.01 | 36.62 |
| Total Debt/ CFO (x) | 0.34 | 0.23 | 0.10 | 0.05 | 0.36 |


Income (P&L) | Balance Sheet | Cash Flow | **Ratios** — STANDALONE

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 24.54 | 25.58 | 19.88 | 18.68 | 18.70 |
| Return on Capital Employed (%) | 30.00 | 32.76 | 29.08 | 26.79 | 26.61 |
| Return on Assets (%) | 18.19 | 20.63 | 15.78 | 14.82 | 13.84 |
| Interest Coverage Ratio (x) | 32.83 | 33.69 | 33.25 | 35.55 | 21.79 |
| Asset Turnover Ratio (x) | 1.60 | 2.21 | 2.29 | 197.17 | 215.43 |
| Price to Earnings (x) | 9.41 | 4.65 | 7.96 | 8.55 | 1.93 |
| Price to Book (x) | 2.31 | 1.19 | 1.58 | 1.60 | 0.36 |
| EV/EBITDA (x) | 5.41 | 2.10 | 4.11 | 4.53 | 0.97 |
| EBITDA Margin (%) | 18.39 | 14.77 | 13.04 | 12.73 | 11.01 |

## மேம்பட்ட விளக்கப்படம்:



## சகநிறுவன ஒப்பீடு:




Prakash Pipes Stock Performance | **Ratio Performance** | SEE ALL PARAMETERS

**INSIGHTS**

**Stock Returns vs Nifty Smallcap 100**

Stock gave a 3 year return of 230.31% as compared to Nifty Smallcap 100 which gave a return of 60.08%. (as of last trading session)


| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Prakash Pipes | 12.16 | 3.27 | 24.54 | 18.19 | 12.59 | 16.93 |
| Astral Poly Tech | 92.63 | 14.89 | 17.13 | 12.14 | 20.85 | 13.52 |
| Finolex Inds. | 20.54 | 2.92 | 8.40 | 6.71 | 8.28 | 15.02 |
| Prince Pipes | 36.23 | 3.09 | 11.81 | 8.59 | 7.28 | 9.04 |
| Apollo Pipes | 66.52 | 3.25 | 7.45 | 4.23 | 23.20 | 7.08 |

Add More

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

சமீபத்திய தரவுகளின்படி Promoter 44.41% வைத்திருக்கிறார். கடந்த சில காலாண்டுகளில் எஃப்ஐஐ 2023-09 இல் 0.27% ஆக இருந்த பங்குகளை 2024-09 இல் 2% ஆக உயர்த்தியது. ACE முதலீட்டாளர்களான டோலி கண்ணா மற்றும் முகுல் மகாவீர் அகர்வால் ஆகியோர் முறையே 3.79% மற்றும் 2.51% பங்குகளை வைத்துள்ளனர்.


**QOQ Change** | Total Shareholdings



Showing Prakash Pipes Shareholding as on 30 Sep 2024

| CATEGORY | 30 SEP 2024 | 30 JUN 2024 | 31 MAR 2024 | 31 DEC 2023 |
|---|---|---|---|---|
| Promoters | 44.41 | 44.27 | 44.27 | 44.27 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 2.00 | 0.93 | 0.37 | 0.26 |
| DII | 0.01 | 0.01 | 0.02 | 0.02 |
| Mutual Funds | 0.01 | 0.01 | 0.02 | 0.02 |
| Others | 53.58 | 54.79 | 55.33 | 55.44 |

QOQ Change | Total Shareholdings




*Showing Shareholding as on 30 Sep 2024*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 1,06,20,992 | 44.41 % | 0.13 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 4,77,758 | 2.00 % | 1.06 |
| DII | 1,748 | 0.01 % | 0.00 |
| MF | 1,723 | 0.01 % | 0.00 |
| Others | 1,28,17,856 | 53.58 % | -1.20 |

## எமது பார்வையில்:

சகாக்களுடன் ஒப்பிடுகையில் கடந்த பல காலாண்டுகளில் இருந்து பிளாஸ்டிக் மற்றும் பேக்கேஜிங் துறையில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்களில் ஒன்றாகும். அடிப்படை மற்றும் நிதி அளவுருக்கள் கூட நன்றாகவும் மேம்பட்டதாகவும் தெரிகிறது. நிறுவனம் தொடர்ந்து வலுவாகச் செயல்பட்டால், நல்ல வளர்ச்சியைக் காணலாம்.

இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 500 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 450 வரை வாங்கலாம். நீண்ட கால அடிப்படையில் இதன் இலக்கு ரூபாய் 700+ & 1050+ கால வரையறை 18 முதல் 36 மாதங்கள்

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

**AVG Logistics Ltd...**
**Entry 430 - 440. Add more on down till 380.**
**Target 500 and 550.**

**Advanced Enzyme Technologies Ltd...**
**Entry 370 - 380. Add more on down till 300.**
**Target 450 and 500.**

**Indian Oil Corporation Ltd...**
**Entry 130 - 135. Add more on down till 100.**
**Target 170 and 200**

**Ramco Industries Ltd...**
**Entry 270 - 280. Add more on down till 220.**
**Target 330 and 390.**

**Dhanuka Agritech Ltd...**
**Entry 1500 - 1550. Add more on down till 1400.**
**Target 1800 and 2000**

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதம் தோறும் பெற்றிடுவீர்

t.me/naamnagarathar
Join Telegram

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be On SATURDAY
10th and 19th January 2025

**Webinar Timings** India Time: in 17:30Hrs-18.30Hrs / 21.00- 22.00Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs / 20.00-21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி...
# விருச்சிக லக்கனம்..!



–ஜோதிடர் எல்லி
9894176494

மனிதர்கள் மட்டுமன்றி நாம் காணும் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் கிரகங்களுக்கு கட்டுபட்டவையே ! இதைதான் மாணிக்கவாசகர் பெருமான் "அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் உள்ளது"என்கிறார்.



பன்னிரு ராசிகளும் 27 நட்சத்திரங்களும் அவை நிற்கும் பாதசாரங்களும் பிரபஞ்சத்தை நகர்த்துகின்றன. ஜாதகத்தில் லக்னங்கள் 12 உள்ளது. ஒவ்வொரு லக்னமும் தனித்தனி தன்மைகள் மற்றும் சிறப்புக்கள் உடையது ஆகும்.

கடந்த இதழில் பதிவில் துலா லக்கனம் பற்றிய தகவல்கள் உங்களுடன் பகிர்ந்து இருந்தேன்.

இந்த இதழில் விருச்சிகம் லக்கனம் பற்றி பார்ப்போம்!

காலப்புருஷ தத்துவத்தின் படி விருச்சிகம் எட்டாம் பாவகம் அங்காரகன் செவ்வாய் பகவானின் ஆட்சி வீடு மனோகாரகன் சந்திரன் நீசம் அடையும் வீடு!



இந்த லக்ன காரர்கள் துடுப்பு மிக்கவர்கள் !சுறுசுறுப்பு, வேகம் இவைகள் உண்டு! பாரம்பரியம், முன்னோர்கள் பக்தி இவற்றை பேணி வருவார்கள். பகை இருக்கும், எதிரிகளை பழிவாங்குவதில் அலாதி பிரியம் கொண்டவர்கள். அதிக கோபம், வெறுப்பு பழிவாங்கும் உணர்ச்சி உடையவர்கள்.

எதிரிகளை நேரடியாக தாக்க மாட்டார்கள், சந்தர்ப்பம் பார்த்து பின்னால் இருந்து செயல்பட்டு வீழ்த்துவார்கள்.சகோதரர்கள் உதவி கிடைக்கும்! உணவு பிரியர்கள் இவர்கள்! சொந்த வீடு அமைவதில் கொஞ்சம் சிக்கல்கள் வரும். பூர்வீக சொத்துகளுக்கு அதிக வாய்ப்புள்ள லக்னம் விருச்சிகம்.

இயற்கை சுபரான குரு பகவான் இவர்களுக்கு முழு யோகர் ஆவார். குரு ஜாதகத்தில் வலுப்பெறுவதே இவர்களுக்கு சிறப்பான எதிர்காலம் உண்டாகும். அரசியல் மற்றும் அரசு உத்தியோகத்திற்கு ஏற்ற லக்னம் விருச்சிகம் என்பதால் புத ஆதித்ய யோகம் இருப்பது நல்லது.

புதன் தனித்து இருப்பது அட்டமாதிபதி யாக கெடுதல் செய்யும்.

இவர்கள் வளர்ந்த பின்னர் தாயாருக்கு உடல், மன ரீதியான உபாதைகள் வந்து போகும்.தந்தையாருடன் உறவு அவ்வளவு சிறப்பாக இருக்காது.

ஆண் வாரிசுகள் இவர்களுக்கு இருக்கும்!. குரு பகவான் விரய ஸ்தானத்தில் நின்றால் முன்னோர்கள் சொத்துகள் மூலம் குழந்தைகளின் கல்வி எதிர்கால முன்னேற்றம் இவற்றுக்கான செலவுகளை செய்யும் யோகம் உண்டாகும். அறக்கட்டளைகள் உருவாக்கி நடத்தும் பாக்கியம் கிட்டும்.

நல்ல அழகான வாழ்க்கை துணை அமையும்! சுக்கிரன் ஏழில் அமர்வது ஆட்சி ஆயினும் களத்திர தோஷம் ஏற்படும் இதனால் திருமண தாமத்தை கொடுத்துவிடும்.



விருச்சிக லக்னத்திற்கு ராகு நல்ல பலன்களை அவ்வளவாக செய்வதில்லை.

வெற்றிகரமான 4ஆம் ஆண்டில்

விருச்சிக லக்ன காரர்கள் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் சகோதரர்கள் உடன் இணக்கமாக செல்லுங்கள், முக்கியமாக கருத்து வேறுபாடுகள் சண்டைகளை தவிர்த்து விடுங்கள். வீடு, தாயார் விசயத்தில் அதிக முயற்சிகள், எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி கொள்ளாதீர்கள் காலத்தின் கையில் விட்டு விடுங்கள்!


முன்னோர்கள் வழிபாட்டினை தொடர்ந்து செய்து வரவேண்டும் சிவ ஆலயங்கள் சென்று தரிசித்து வருவது நன்மைகளை கொடுக்கும். தினசரி சூரிய நமஸ்காரம் செய்து வருவது உயர்ந்த இடத்தை அடைய வழிவகை செய்யும்.

புஷ்பராகம் கற்களை அணியலாம்!பெரியோர்களை நிந்தனை செய்தல் கூடாது.

இது வரையிலும் விருச்சிக லக்னம் பற்றிய தகவல்களை அறிந்து கொண்டோம்.

அடுத்த இதழில் தனுசு லக்னம் பற்றிய கட்டுரையில் சந்திக்கிறேன்

திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரை சேர்ந்தவர் ஜோதிடர் எல்லி. சட்டம் பயின்ற இவர் ஜோதிடம், தத்துவம், வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஜோதிடம் தொடர்பான ஆய்வுகள், கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 9894176494



# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

**97917 76534**

www.naamnagarathar.com